352/2002

தமிழ் நாடு சட்டமன்ற பேரவை

நடவடிக்கைகள் : அலுவல் வெளியீடு.

தொகுதி 114. எண் 1.

ஜூன் 29, 2001 தொகுதி 114. எண் 1


D.
V 2|1, 31'9|1
ஒ1·114·1.
223656.

**29-1-2001**

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| | தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| | Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* | *வினாக்கள்–விடைகள்—* | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-34 |
| *2.* | *இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2001-2002, அளித்தல்—* | |
| | மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 35-56 |
| *3.* | *அறிவிப்பு—* | |
| | இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2001-2002, வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல் | 57 |
| *4.* | *முன்பண மானியக் கோரிக்கைகள், 2001-2002, பேரவையில் வைத்தல்—* | |
| | மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 57-61 |
| *5.* | *பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—* | 61 |

223686

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. | முதலமைச்சர் | : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. | கல்வி அமைச்சர் | : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. | மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |
| 5. | வேளாண்மைத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு. |

53-419—1a

6. **பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

7. **போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தொழிலாளர் நலன், மக்கள்தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு மற்றும் பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

8. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

9. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

10. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பால் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள் மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃப்).



13. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

14. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:**
கைத்தறி, துணித் தொழில்.

15. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

16. **இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**
விளையாட்டு, இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

17. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

18. **ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

19. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
கால்நடை பராமரிப்பு.

21. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

22. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு.**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

23. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

24. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

25. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

5. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

6. **Minister for Public Works and Forest** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona.

7. **Minister for Transport and Labour** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Chennai Metropolitan Development Authority, Labour, Census, Employment and Training, Iron and Steel Control and Newsprint Control.

8. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports.

9. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

10. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

11. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Revenue** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Wakf.



13. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

14. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles.

15. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

16. **Minister for Youth and Pollution Control** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports, Youth Service Corps and Environmental Pollution Control.

17. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

18. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

19. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

20. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry.

| | | |
|---|---|---|
| 21. | **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 22. | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 23. | **Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 24. | **Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 25. | **Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |

# *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை*

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்@*

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்**

**திரு. சுப. தங்கவேலன்**

**திரு. ஏ.ஜி. சம்பத்**

**திரு. ப. மோகன் கந்தசாமி**

**திரு. பி. வெங்கடசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

---

*@22-1-2001 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு*

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | - | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. சி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 4. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 5. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 8. | திருமதி வி.நா. உமா, பி.ஏ. | - | குழு அலுவலர் |
| 9. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 10. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | - | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 11. | திரு. சு. ராஜகுரு | - | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | - | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 14. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 15. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 17. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 18. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |

19. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
20. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
21. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்
22. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
23. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
24. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
25. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
26. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
27. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
28. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன் எம்.எஸ்.சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
29. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்
30. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
31. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
32. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
33. திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்
34. திருமதி என். மீனாட்சி எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
35. திரு. மு. பொன்னுரங்கம் எம்.ஏ., பி.எல். .. தலைமை நிருபர்
36. திரு. தி. உமாபதி, பி.ஏ. .. தலைமை நிருபர்
37. திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ.பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
38. திரு. கோ. தேவராஜன், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
39. திருமதி ச.இரா. சுகுணா .. தலைமை நிருபர்
40. திருமதி சீ. நிர்மலா, பி.காம்., .. தலைமை நிருபர்
41. திருமதி இரா. கஸ்தூரி பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
4. அப்பாவு, திரு. மு. .. இராதாபுரம்
5. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
6. அய்யலுசாமி, திரு. லி. .. கோவில்பட்டி
7. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
8. அழகராஜா, திரு. என்.ஆர். .. தேனி
9. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
10. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
11. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
12. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
13. அன்பில் பெரியசாமி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
14. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
15. ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. பவானிசாகர்
16. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
17. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்
18. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
19. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
20. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்

| | | |
|---|---|---|
| 21. | ஆனந்தன், திரு. பால. | - வந்தவாசி (செ.வ.) |
| 22. | இரகுமான்கான், திரு. அ. | - இராமநாதபுரம் |
| 23. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | - மேலூர் |
| 24. | இராசமாணிக்கம், திரு. பி. | - ஒரத்தநாடு |
| 25. | இராசன், திரு. வி.பி. | - இராஜபாளையம் (செ.வ.) |
| 26. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | - ஆண்டிமடம் |
| 27. | இராமசாமி, டாக்டர் வை. | - பண்ருட்டி |
| 28. | இராமசாமி, திரு. கே.ஆர். | - திருவாடனை |
| 29. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | - கம்பம் |
| 30. | இராமச்சந்திரன், திரு. சி.இரா. | - தொண்டாமுத்தூர் |
| 31. | இராமச்சந்திரன், திரு. மா. | - திருவோணம் |
| 32. | இராமலிங்கம், திரு. ஏ. | - காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 33. | இராமலிங்கம், திரு. செ. | - திருவிடைமருதூர் |
| 34. | இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | - பள்ளிப்பட்டு |
| 35. | இராமஜெயம், திரு. ந.பூ. | - மயிலாப்பூர் |
| 36. | இராஜரெட்டி, திரு. ச. | - தளி |
| 37. | இராஜேந்தர், திரு. டி. | - பூங்கா நகர் |
| 38. | இளங்கோ, திரு. கோ. | - அவினாசி (செ.வ.) |
| 39. | ஈஸ்வரன், திரு. ரா. | - வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 40. | உதயசூரியன், திரு. தா. | - சங்கராபுரம் |
| 41. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | - தஞ்சாவூர் |
| 42. | கணேசன், திரு. ஐ. | - எடப்பாடி |



| | | |
|---|---|---|
| 43. | கணேசன், திரு. கே.சி. | - ஜெயங்கொண்டம் |
| 44. | கருணாநிதி, கலைஞர் மு. | - சேப்பாக்கம் |
| 45. | கருப்பசாமி, திரு. சொ. | - சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 46. | கருப்பண்ண உடையார், திரு. ந. | - பாபநாசம் |
| 47. | கருப்புசாமி, திரு. டி. | - உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 48. | கன்னையன், திரு. க. | - தொட்டியம் |
| 49. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | - கிருஷ்ணகிரி |
| 50. | காந்தி, திரு. ஆர். | - இராணிப்பேட்டை |
| 51. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | - ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 52. | கிருஷ்ணன், திரு. எஸ்.வி. | - நாங்குநேரி |
| 53. | கிருஷ்ணன், திரு. சீ.வெ. | - வேடசந்தூர் |
| 54. | குண்டன், திரு. டி. | - உதகமண்டலம் |
| 55. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | - குத்தாலம் |
| 56. | குமாரதாஸ், டாக்டர் தே. | - கிள்ளியூர் |
| 57. | கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. | - கும்மிடிப்பூண்டி |
| 58. | குழந்தை தமிழரசன், திரு. | - விருத்தாசலம் |
| 59. | கோதண்டம், திரு. ஏ. | - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 60. | கோபால், திரு. பா. | - மேட்டூர் |
| 61. | கோபு, திரு. சி. | - அணைக்கட்டு |
| 62. | கோமதி சீனிவாசன், திருமதி | - வலங்கைமான் (செ.வ.) |
| 63. | கோவிந்தன், திரு. ப. | - தாரமங்கலம் |
| 64. | கோவிந்தன், திரு. வெ. | - பேரணாம்பட்டு (செ.வ.) |
| 65. | சக்ரபாணி, திரு. ஆர். | - ஒட்டன்சத்திரம் |

| | | |
|---|---|---|
| 66. சண்முகம், திரு. கோ. | - | திருப்பத்தூர் |
| 67. சண்முகம், திரு. சி. | - | ஆலந்தூர் |
| 68. சண்முகம், திரு. ம. | - | கிணத்துக்கடவு |
| 69. சண்முகம், திரு. வி.சி. | - | நெல்லிக்குப்பம் |
| 70. சந்தானம், திரு. லா. | - | சோழவந்தான் |
| 71. சந்திரசேகரன், திரு. சி. | - | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 72. சந்திரசேகரன், திரு. துரை. | - | திருவையாறு |
| 73. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. | - | சமயநல்லூர் (செ.வ.) |
| 74. சம்பத், திரு. ஏ.ஜி. | - | முகையூர் |
| 75. சரஸ்வதி, திருமதி ஆர். | - | தாராபுரம் (செ.வ.) |
| 76. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. | - | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 77. சாமிநாதன், திரு. மு.பெ. | - | வெள்ளக்கோவில் |
| 78. சிங்காரவேலு, திரு. வி.பி. | - | வால்பாறை (செ.வ.) |
| 79. சிவபுண்ணியம், திரு. வை. | - | மன்னார்குடி |
| 80. சிவராமன், திரு. ஆர். | - | திருப்பத்தூர் |
| 81. சிவராஜ், திரு. சு. | - | ரிஷிவந்தியம் |
| 82. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | - | பனமரத்துப்பட்டி |
| 83. சிவானந்தம், திரு. ஆர். | - | ஆரணி |
| 84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. | - | திருத்தணி |
| 85. சின்னய்யா, திரு. வெ. | - | திருமயம் |
| 86. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | - | விருதுநகர் |
| 87. சுகவனம், திரு. இ.ஜி. | - | பர்கூர் |



| | | |
|---|---|---|
| 88. சுடலைமுத்து, திரு. அ. | - | போடிநாயக்கனூர் |
| 89. சுதர்சனம், திரு. டி. | - | பூந்தமல்லி |
| 90. சுந்தரம், திரு. க. | - | பொன்னேரி (செ.வ.) |
| 91. சுந்தரம், திரு. ந. | - | காரைக்குடி |
| 92. சுந்தரம், திரு. பி.ஆர். | - | இராசிபுரம் |
| 93. சுந்தர், திரு. சே. | - | உத்திரமேரூர் |
| 94. சுப்பராயன், திரு. சே. | - | திருப்பூர் |
| 95. சுப்பிரமணி என்கிற சி.க. மணி, திரு. சி. | - | திருவள்ளூர் |
| 96. சுப்பிரமணி, திரு. பி.என். | - | ஆற்காடு |
| 97. சுப்பிரமணியன், திரு. அ.லெ. | - | திருநெல்வேலி |
| 98. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | - | மொடக்குறிச்சி |
| 99. சுரேஷ் ராசன், திரு. என். | - | கன்னியாகுமரி |
| 100. செங்குட்டுவன், புலவர் பூ.ம. | - | மருங்காபுரி |
| 101. செங்கை சிவம், திரு. | - | பெரம்பூர் (செ.வ.) |
| 102. செல்லக்குமார், டாக்டர் அ. | - | தியாகராய நகர் |
| 103. செல்வம், திரு. ரெ. | - | குளித்தலை |
| 104. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. | - | கொளத்தூர் (செ.வ.) |
| 105. செல்வராஜ், திரு. து. | - | உடுமலைப்பேட்டை |
| 106. சேகரன், திரு. ஆர்.ஆர். | - | ஓமலூர் |
| 107. சேதுநாதன், திரு. ரா. | - | திண்டிவனம் |
| 108. சைதை கா. கிட்டு, திரு. | - | சைதாப்பேட்டை |
| 109. ஞானசேகரன், டாக்டர் ஆ. | - | மேல்மலையனூர் |

110. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
111. டேவிட் செல்வின், திரு. எஸ். - ஸ்ரீவைகுண்டம்
112. தங்கமணி, திரு. கே. - மானாமதுரை (செ.வ.)
113. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
114. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
115. தங்கவேல், திரு. அ.ல. - சேலம்-2
116. தண்டபாணி, திரு. சி.டி. - கோயம்புத்தூர் மேற்கு
117. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. - இளையான்குடி
118. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். - அரக்கோணம் (செ.வ.)
119. தமிழ்மணி, திரு. வீ. - செங்கல்பட்டு
120. தளபதி, திரு. கோ. - சேடப்பட்டி
121. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. - சேலம்-1
122. தனபால், திரு. வி.ஜி. - குடியாத்தம்
123. தாமரைக்கனி, திரு. இரா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
124. திசைவீரன், திரு. உ. - பரமக்குடி (செ.வ.)
125. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
126. திருவேங்கடம், திரு. பெ.சு. - கலசப்பாக்கம்
127. துரைசாமி, திரு. பா. - வரகூர் (செ.வ.)
128. துரை, திரு. கே. - திருவெறும்பூர்
129. துரைமுருகன், திரு. - காட்பாடி
130. தெய்வநாயகம், திரு. எ. - மதுரை மத்தி
131. தேவராஜன், டாக்டர் மு. - பெரம்பலூர் (செ.வ.)
132. நடராசன், திரு. ஆ - பேரூர்



133. நடராஜன், திரு. த. - செஞ்சி
134. நயினா முகமது, திரு. கோ. - கடையநல்லூர்
135. நன்னன், திரு. கொ.வீ. - செங்கம் (செ.வ.)
136. நாகரத்தினம், திரு. ச. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
137. நாசர், திரு. ஏ.வி.ஏ. - புவனகிரி
138. நிஜாமுதீன், திரு. ஜி. - நாகப்பட்டினம்
139. நேரு, திரு. கா.நா. - லால்குடி
140. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. - சிவகங்கை
141. பத்மா, டாக்டர் - நன்னிலம் (செ.வ.)
142. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
143. பரிதி இளம்வழுதி. திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
145. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். - மதுரை மேற்கு
146. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
147. பன்னீர்செல்வம், திரு. மு. - சீர்காழி (செ.வ.)
148. பாண்டுரங்கன், திரு. ந. - பெரணமல்லூர்
149. பாலகிருஷ்ணன், திரு. சோ. - முதுகுளத்தூர்
150. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். - பவானி
151. பாலசுப்பிரமணியன், திரு. ப. - பட்டுக்கோட்டை
152. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
153. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
154. புரட்சிமணி, திரு. ச. - மங்களூர் (செ.வ.)
155. பூவேந்தன், திரு. த. - பழனி (செ.வ.)

156. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
157. பெரியசாமி, திரு. என். - தூத்துக்குடி
158. பெரியசாமி, திரு. என்.கே.கே. - ஈரோடு
159. பெரியசாமி, திரு. நா. - பெருந்துறை
160. பெருமாள், திரு. வி. - ஏற்காடு (ஆ.வா.)
161. பொ்னார்டு, திரு. இரா. - குளச்சல்
162. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - சிங்காநல்லூர்
163. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
164. பொன்முடி, திரு. எஸ்.எஸ். - பல்லடம்
165. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
166. மகேந்திரன், திரு. இரா. - நாட்ராம்பள்ளி
167. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. - திருநாவலூர்
168. மணி, டாக்டர் அ. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
169. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
170. மணி, திரு. டி. - விளவங்கோடு
171. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
172. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
173 மணிமாறன், திரு. இரா. - திண்டுக்கல்
174. மணிவர்மா, திரு. க. - தண்டராம்பட்டு
175. மதிவாணன், திரு. இரா. - இராயபுரம்
176. மதிவாணன், திரு. செ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
177. மனோகரன், திரு. கு. - தருமபுரி
178. மாயவன், திரு. தி.ப. - ஸ்ரீரங்கம்



179. மாரி அய்யா, திரு. பே. - புதுக்கோட்டை
180. மாரிமுத்து, திரு. அ. - வானூர் (செ.வ.)
181. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். - அரவக்குறிச்சி
182. முகம்மது கோதர் மைதீன், திரு. - பாளையங்கோட்டை
183. முத்து, திரு. வி. - சங்கரி (செ.வ.)
184. முபாரக், திரு. பா.மு. - கூடலூர்
185. முருகேசன், திரு. பொ. - காஞ்சிபுரம்
186. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
187. முனிரத்தினம், திரு. ஆ.மு. - சோளிங்கர்
188. மூக்கப்பன், திரு. இரா. - சின்னசேலம்
189. மூக்கையா, திரு. எல். - பெரியகுளம்
190. மோகனதாசன், திரு. கோ. - பூம்புகார்
191. மோகன் கந்தசாமி, திரு. ப. - பொங்கலூர்
192. மோசஸ், டாக்டர் எம். - நாகர்கோவில்
193. ரங்கநாதன், திரு. எம். - குன்னூர் (செ.வ.)
194. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
195. ரவி அருணன், திரு. கே. - தென்காசி
196. ரவிசங்கர், திரு. கு. - விளாத்திகுளம்
197. ராசேந்திரன், திரு. ஏ. - போளூர்
198. ராணி, செல்வி க. - தலைவாசல் (செ.வ.)
199. ராமசாமி, திரு. ஏ.எம். - ஆத்தூர்
200. ராமச்சந்திரன், திரு. செ. - திருப்பரங்குன்றம்

| | | |
|---|---|---|
| 201. ராஜு, திரு. எஸ். | - | பொள்ளாச்சி |
| 202. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | - | சத்தியமங்கலம் |
| 203. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | - | காங்கேயம் |
| 204. லட்சுமணன், திரு. வி.கே. | - | கோயம்புத்தூர் கிழக்கு |
| 205. வாசுகி முருகேசன், திருமதி | - | கரூர் |
| 206. விசுவநாதன், திரு. இரா. | - | நத்தம் |
| 207. விஜயகுமார், திரு. கே.எம். | - | சாத்தூர் |
| 208. விஜயன், திரு. டி.சி. | - | திருவொற்றியூர் |
| 209. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - | வீரபாண்டி |
| 210. வீரப்பன், திரு. கே.கே. | - | கபிலர்மலை |
| 211. வெங்கடசாமி, திரு. பி. | - | ஓசூர் |
| 212. வெங்கடாசலம், திரு. அ. | - | ஆலங்குடி |
| 213. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | - | பாலக்கோடு |
| 214. வெங்கடேசன், திரு. ச.க. | - | மதுராந்தகம் |
| 215. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | - | காவேரிப்பட்டினம் |
| 216. வெங்கிடு, திரு. ஜி.பி. | - | கோபிச்செட்டிப் பாளையம் |
| 217. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | - | அரூர் (செ.வ.) |
| 218. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - | வேதாரண்யம் |
| 219. வேலாயுதன், திரு. சி. | - | பத்மநாபபுரம் |
| 220. வேலுசாமி, திரு. வ. | - | மதுரை கிழக்கு |
| 221. வேல்சாமி, திரு. க. | - | நாமக்கல் (செ.வ.) |
| 222. வேல்துரை, திரு. பா. | - | சேரன்மகாதேவி |



| | | |
|---|---|---|
| 223. வைத்தியலிங்கம், திரு. மீ.அ. | - | தாம்பரம் |
| 224. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | - | திருச்செந்தூர் |
| 225. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | - | முசிறி |
| 226. ஸ்டாலின், திரு. மு.க. | - | ஆயிரம் விளக்கு |
| 227. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | - | திருவட்டாறு |
| 228. ஆன் டி' மான்டி, திருமதி | - | நியமனம் |
| 229. வெற்றிடம் | - | அறந்தாங்கி |
| 230. வெற்றிடம் | - | உசிலம்பட்டி |
| 231. வெற்றிடம் | - | சிவகாசி |
| 232. வெற்றிடம் | - | திருப்போரூர் (செ.வ.) |
| 233. வெற்றிடம் | - | திருமங்கலம் |
| 234. வெற்றிடம் | - | திருவல்லிக்கேணி |
| 235. வெற்றிடம் | - | மயிலாடுதுறை |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. கே.வி. வெங்கடபதி - அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 16, விக்கிரம, திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 ஜனவரி 29, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர் பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்(கு) ஒளி."

நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

## உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 81, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**81—**

### வளர்கல்வி மையம்

***34427—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிதம்பரபுரம் கிராமத்தில் வளர்கல்வி மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

[2001 ஜனவரி 29

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2000 மக்கள் தொகை கொண்ட கிராமத்திற்கு வளர்கல்வி மையம் தொடங்கப்பட மைய அரசு அனுமதி அளித்துள்ளது. மேற்சொன்ன விதி நிறைவு செய்யப்படாததால், சிதம்பரபுரம் கிராமத்தில் தற்போது வளர்கல்வி மையம் செயல்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 82, திரு. செ. மதிவாணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

82—

## பொது மருத்துவமனை

***16777—திரு. செ. மதிவாணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதி, சித்தாமூர் ஒன்றியம், போலம்பாக்கத்தில் இயங்கி வரும் தொழு நோய் மருத்துவமனை இயங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) இதைப் பொது மருத்துவமனையாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதி, சித்தாமூர் ஒன்றியம், போலம்பாக்கத்தில் உள்ள தொழுநோய் மருத்துவமனை தொடர்ந்து தொழுநோய் மருத்துவமனையாக இயங்கி வருகிறது.

(ஆ) பொது மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 83, திரு. வி. அய்யலுசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



2001 ஜனவரி 29]

83—

## ஆரம்ப சுகாதார நிலையம்

***38684—திரு. வி. அய்யலுசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, லிங்கம்பட்டி-சமத்துவபுரத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) லிங்கம்பட்டி சமத்துவபுரம் கிராமத்தில் மக்கள்தொகை 1,775. இந்தக் கிராமம் குலசேகரபுரம் துணை சுகாதார நிலையம், ஈராச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்தது. இக் கிராமத்திற்கு 8 கிலோ மீட்டர் தொலைவில் கோவில்பட்டி அரசு மருத்துவமனை செயல்படுவதால் இக்கிராமத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 84, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

84—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***33984—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நகராட்சி, மேலகரம், எஸ். புதூர், குற்றாலம், இலஞ்சி பேரூராட்சிகள் மற்றும் வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்து பணிகளை விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

[2001 ஜனவரி 29

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை நகராட்சி, குற்றாலம், இலஞ்சி நகரப் பேரூராட்சிகள் எஸ். புதூர், மேலகரம் ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் கடையம், தென்காசி, செங்கோட்டை ஒன்றியங்களில் உள்ள 46 வழியோர ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.20 கோடியே 36 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் செயலாக்கத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன. பணி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டவுடன் பணிகள் தொடங்கப்படும்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்து பணி ஆணை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தப்புள்ளி வாரியக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட வேண்டும். விரைவாக, வாரியக் குழுக் கூட்டம் நடைபெற இருக்கிறது. வர இருக்கிற அந்தக் கூட்டத்திலேயே இதை வைத்து முடிவெடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறேன். அதன்படி முடிவெடுப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 85, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**85—**

## நிரந்தர கோட்டம்

***37162—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிநீர் வடிகால் வாரியத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நிரந்தர கோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.



2001 ஜனவரி 29]

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனுக்கு தேவையான முக்கியமான கட்டமைப்பு வசதிகளிலே முதன்மையானது குடிநீர், மின்சாரம், சாலை, பொதுப்பணித் துறை போன்ற பல்வேறு துறைகளிலே நிரந்தரமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கோட்டம் இருக்கிறது. அதேபோல இந்தக் குடிநீர் வடிகால் வாரியத்திலே ஒருசில நேரங்களிலே ஒவ்வொரு மாவட்டத்தை விட்டு நிரந்தரமாக அந்தக் கோட்டம் மாற்றப்படுகின்ற சூழ்நிலையிலே அதிகாரிகள், அலுவலர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, மீண்டும் பரிசீலனை செய்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிரந்தரமான கோட்டம் அமைத்துத் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு வாரியம். இந்த வாரியம் ஒரு குறிக்கோளில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அனைத்துக் கிராமப் பகுதிகள், நகர் மன்றப் பகுதிகள், அனைத்திற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு பணியாற்றுகிறது. கூடுமானவரையில் 80 சதவிகிதப் பணிகள் நிறைவுபெறுகிற தருவாயில் இருக்கின்றன. ஆனால், தனித் தனிக் கோட்டங்கள் என்று அமைக்கின்றபோது, அதிகாரிகள், அதற்கான இதர செலவினங்கள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. தற்போது இருக்கின்ற வருவாயையொட்டி அதிகம் செலவழித்தால் அந்த வாரியம் நமக்கு ஆற்ற வேண்டிய பணிகளில் தொய்வு ஏற்படுகின்ற நிலைமை ஏற்படும். எனவே, தயவுசெய்து, திட்டங்களுக்காகவும், பராமரிப்பிற்காகவும் செலவழிப்பதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டிய ஆலோசனைகளை உறுப்பினர்களும் வழங்கினால் நலமாக இருக்கும் என்று கூறுகிறேன். யாரோ ஒரு சில அதிகாரிகள் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய, முன்கூட்டியே கிடைக்கின்ற அந்தப் பதவி உயர்வின் அடிப்படையில் கோட்டங்களை உருவாக்குவது, அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது என்று இந்த நோக்கத்தில் சிபாரிசு செய்வதை தயவுசெய்து நீங்கள் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போதிருக்கிற நிலைமை, குடிநீர் வடிகால் வாரியத்தில் 34 கிராமக் குடிநீர்த் திட்டக் கோட்டங்களும், 18 நகரக் கோட்டங்களும், 6 திட்டக் கோட்டங்களும், 10 திட்ட உருவாக்கக் கோட்டங்களும், 16 பராமரிப்புக்

கோட்டங்களும், 3 புளோரைடு கோட்டங்களும், 3 இயந்திரவியல் கோட்டங்களும், உப்பு நீரை நன்னீராக்கும் கோட்டம் ஒன்றும்கூட இப்போது ஏற்படுத்தியிருக்கிறோம். இப்படி ஒவ்வொரு தலைப்பிற்கும் ஒவ்வொரு கோட்டம், தேவைப்படுகிற இடங்களில், அந்தப் பணி தேவைப்படுகின்ற காலம் வரை அந்தக் கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் முடிவுற்றால் அந்தக் கோட்டம் மாற்றப்படுகிறது. அதுதான் வழக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியம் மூன்று வகையாகச் செயல்படுகிறது. உதாரணமாக, ஏற்கெனவே குடிநீர் கொடுக்கப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஒரு துறை; புதிதாக குடிநீர் ஆதாரங்களை உண்டாக்குவதற்கு ஒரு துறை; உப்பு நீரை நன்னீராக்குவதற்கு ஒரு துறை என்று மூன்று துறைகளாக ஒரே மாவட்டத்தில் செயல்படுகிறது. இதன் காரணமாக ஒரே குழப்பமாக இருக்கிற காரணத்தால், இந்த மூன்று துறைகளையும் ஒன்றாக்கி, ஒரு மாவட்டத்திற்கு ஒரு கோட்டம் என்கின்ற முறையில் குடிநீர் வடிகால் வாரியத்தை அமைத்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். இதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழப்பம் என்பது புரியாத காரணத்தால் நமக்கு ஏற்படலாமே தவிர, அந்த நிர்வாகத்தில் குழப்பம் இருப்பதாகத் தோன்றவில்லை. தயவுசெய்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் ஆரம்பத்திலேயே மூலக் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். தேவையற்ற அளவுக்கு கோட்டங்களை உருவாக்குவதால் அதிகமான செலவினம் ஏற்படுகிறது. அதனால், பராமரிப்புச் செலவிற்கும் சில நேரங்களில் சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகையினால்தான், இருக்கின்ற கோட்டங்களிலே அவரவர்களுக்கு அங்கே தனித்தனியாக அதிகாரிகள் இருக்கின்றார்கள். ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒரு தலைமை அதிகாரி என்று இருக்கிறார்கள். ஆனால், அந்தப் பணிகளுக்கு என்று தனியாக கேட்கிறார்கள். சில நேரங்களில் நீங்கள் போய் கிராமக் குடிநீர்த் திட்டங்களைப் பார்க்கின்றவரிடத்தில், நகரக் குடிநீர்த் திட்டத்தைப்பற்றிக் கேட்டால் அவர்களுக்குத் தெரியாது. காரணம், அவர்கள் அந்தப் பணியைப் பார்க்கிறார்கள்; இவர்கள் இந்தப் பணியைப் பார்க்கிறார்கள். குழப்பத்திற்கு இதில் இடமே இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 86, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

86—

## உழவர் சந்தை

***39144—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்தில் உழவர் சந்தை அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம் என்பது கிட்டத்தட்ட 6 தொகுதிகளை உள்ளடக்கியது. அந்த ஆறு தொகுதிகளிலும், நாகப்பட்டினத்தில், தலைமையிடத்தில், வணக்கத்திற்குரிய சென்னை மேயர் அவர்களும், மயிலாடுதுறை நகரத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் உழவர் சந்தையைத் திறந்து, அது சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதேபோன்று, வளர்ந்துவரும் நகரங்களில் சீர்காழி நகரமும் ஒன்று. அதிலே உள்ளடங்கி இருக்கக்கூடிய கொள்ளிடம் ஒன்றியத்தைச் சேர்ந்த கிட்டத்தட்ட 20, 30 கிராமங்களிலே விவசாயத் தொழிலை மட்டுமே நம்பி விவசாயிகள் வாழ்கிறார்கள். அவர்கள் காய், கனிகள் உற்பத்திதான் செய்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்கின்ற காய், கனிகளை பக்கத்திலே இருக்கின்ற சிதம்பரம் நகரிலே கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றார்கள். சீர்காழி மக்களிடத்திலே இருந்துவரும் மிகப் பெரிய கோரிக்கைகளிலே உழவர் சந்தை மிகப் பெரிய கோரிக்கை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டங்களில், இது மிகச் சிறப்பான திட்டம். உழவர் சந்தை அமைப்பதற்குரிய இடமும் சீர்காழி புதிய பேருந்து நிலையத்திற்கு அருகிலே இருக்கிறது. அங்கே பக்கிரிக்குட்டை என்ற ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளம் அரசுக்குச் சொந்தமான குளம். அந்த இடத்திலே உழவர் சந்தை அமைத்துக் கொடுக்க அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சீர்காழியிலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவில் இருக்கின்ற மயிலாடுதுறையில் ஓர் உழவர் சந்தை இருக்கிறது. அதைப்போல மயிலாடுதுறையிலிருந்து சிதம்பரம் 18 கிலோமீட்டர், அங்கேயும் ஓர் உழவர் சந்தை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சீர்காழியிலே ஓர் உழவர் சந்தை வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை இங்கே எழுப்பி இருக்கிறார்கள். அவருடைய கோரிக்கை கனிவோடு பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் எடப்பாடி நகரில் ஓர் உழவர் சந்தையை ஏற்படுத்த வேண்டுமென்று பலமுறை மனுக்கள் கொடுத்திருக்கிறேன். எடப்பாடியிலிருந்து 40 கிலோ மீட்டருக்கு அப்பால்தான் சேலத்திலே உழவர் சந்தை உள்ளது. அதேபோல எடப்பாடியிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில் குமாரபாளையத்தில் உழவர் சந்தை உள்ளது. அதேபோல எடப்பாடியிலிருந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தூரம் எல்லாம் சொல்ல வேண்டாம்.

**திரு. ஐ. கணேசன்:** 18 கிலோ மீட்டர் என்று சொன்னார், அதற்காகத்தான் இதைக் குறிப்பிட்டேன். 35 கிலோ மீட்டருக்கு மேலே உள்ள மேட்டூரில்தான் உள்ளது. இந்தப் பகுதிகளுக்கு இடையிலே இருக்கக்கூடிய, மத்தியிலே இருக்கக்கூடிய எடப்பாடி நகரில் உழவர் சந்தையை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சர் முதல்கட்டமாக 100 உழவர் சந்தைகள் தொடங்கப்படும், அதுவும் முதல்கட்டமாக நகராட்சிப் பகுதிகளிலே தொடங்கப்படும் என்று அறிவித்து, இப்போது 102 உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்படுகின்றன. அதேபோல மேலும் பல நகராட்சிகளிலும், எடப்பாடி போன்ற நகராட்சிகள், அதற்கு அடுத்தகட்டமாக பேரூராட்சிப் பகுதிகளிலும் இந்த உழவர் சந்தைகளைத் தொடங்குவதற்கு அரசு பரிசீலிக்கிறது. ஓர் உழவர் சந்தை



தொடங்குகிறபோது, அங்கே காய்கறிகள் உற்பத்தியை கணக்கிட வேண்டியிருக்கிறது. Consumers - நுகர்வோர்கள் எவ்வளவு பேர் அந்த உழவர் சந்தை தொடங்கக்கூடிய இடத்திலே இருக்கிறார்கள், பயன் பெறுவார்கள் என்பதையும் நாம் இப்போது கணக்கிட்டு, அந்த அடிப்படையிலே உழவர் சந்தையை தொடங்கினால்தான் அது சிறப்பான முறையிலே செயல்படக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. அந்த அடிப்படையிலே இங்கு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன எடப்பாடியிலே ஓர் உழவர் சந்தை தேவை என்பதை நானும் உணர்கிறேன். அங்கு உழவர் சந்தை அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் வடசேரியில் இருக்கக்கூடிய உழவர் சந்தை பொது மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று பெருமையோடு நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில், அதாவது மாவட்டத்தினுடைய கிழக்குப் பகுதியில் ஒன்று அமைந்திருக்கிறது. மாவட்டத்தினுடைய மேற்குப் பகுதி, அதாவது நாகர்கோவிலிலிருந்து 25 கிலோ மீட்டருக்கு மேல் இருக்கக்கூடிய கருங்கல், ஏற்கெனவே அந்த கருங்கல்லிலே ஒரு சந்தை இருக்கிறது. நல்ல இட வசதி இருக்கிறது. அங்கே உழவர் சந்தையாக ஆரம்பிக்கலாம். காரணம் அந்தப் பக்கத்திலிருந்துதான் அதிகமான காய்கறிகள் வடசேரிக்கு வர வேண்டியிருக்கிறது; அதிக தூரத்திலிருந்து வர வேண்டியிருக்கிறது. எனவே கருங்கல்லிலே ஓர் உழவர் சந்தையை ஆரம்பிக்க அனைத்து வாய்ப்பு வசதிகளும் இருப்பதைக் கணக்கில் கொண்டு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்பு என்னிடத்திலே இல்லை, மாண்புமிகு உறுப்பினர் இங்கு எழுப்பிய வினாவையொட்டி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது பெரும்பாலும் நகராட்சிப் பகுதிகளிலே உழவர் சந்தை அமைக்கப்பட்டு, அடுத்த கட்டமாக பேரூராட்சிப் பகுதிகளிலே தேவையான இடங்களிலே உழவர் சந்தை அமைக்கப்படுகிறது. அதையொட்டி சில தாலுகா தலைநகரங்கள் சில இடங்களிலே பேரூராட்சியாக இருக்கின்றன. உதாரணமாக, எங்கள் பகுதியைச் சேர்ந்த

காங்கேயம் தாலுகா பேரூராட்சிக்கான இடமாக இருக்கிறது; அந்த இடத்தில் இதுவரை உழவர் சந்தை அமைக்கப்படவில்லை. அதற்கு அருகில் உழவர் சந்தை எதுவும் இல்லை. அங்கிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தாராபுரம் செல்ல வேண்டும் அல்லது 45 கிலோ மீட்டரிலுள்ள ஈரோடுதான் செல்ல வேண்டும். எனவே, காங்கேயத்திலே உழவர் சந்தையை அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உழவர் சந்தையைத் தொடங்குவது என்பது இந்த இடத்திலேதான் ஆரம்பிப்பது என்று இலக்கு ஒன்றும் நிர்ணயிக்கப்படவில்லை. இருந்தாலும் எங்கெல்லாம் வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் நாம் தொடங்கலாம். ஆனால் அந்த உழவர் சந்தைக்கு தேவையான காய்கறிகள் வரவேண்டும்.

முற்பகல் 9-45

அதற்காக இப்போது தோட்டக் கலைத் துறை, வேளாண்மைப் பல்கலைக்கழகம் இவற்றை கொண்ட குழு அமைத்து நல்ல விதைகள், விளைச்சலைக் கூடுதலாகத் தரக்கூடிய விதைகள், ஆண்டு முழுவதும் விளையக்கூடிய விதைகள், அதுவும் குறுகிய காலத்திலே விளையக்கூடிய விதைகள் இவையெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு, அந்த விதைகளை இவர்களே வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினுடைய ஆராய்ச்சிப் பண்ணை, தோட்டக் கலைத் துறையினுடைய பண்ணைகள். வேளாண்மைத் துறையினுடைய பண்ணைகளில் நாம் விதைகளை உற்பத்தி செய்து, இப்பொழுது ஒவ்வோர் உழவர் சந்தையிலும் விவசாயிகளுக்குப் பாதி மானிய விலையிலே நாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே அது இப்பொழுது விவசாயிகள் மத்தியிலே நல்ல வரவேற்பையும் பெற்றிருக்கிறது. இது அதிக அளவிலே விதைகளை வாங்கி உற்பத்தி அதிகம் ஆகிறபோது நகராட்சிப் பகுதி, பேரூராட்சிப் பகுதி என்று இருப்பதை இன்னும்கூட கொஞ்சம், சிறிய கிராமமாக இருந்தாலும்கூட, நாம் எதிர்காலத்திலே அதை ஆரம்பிக்கலாம். ஆகவே இப்பொழுது எங்கெங்கு தேவை என்ற கோரிக்கை வருகிறதோ அவற்றையெல்லாம் பரிசீலித்து முறையாக நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தில்தான் முதல் உழவர் சந்தை ஆரம்பிக்கப்பட்டது.



அது மிகச் சிறப்பான முறையிலே மக்களுடைய பேராதரவோடு நடந்துகொண்டு வருகிறது. அதைப்போலவே, முதல் சமத்துவபுரமும் மதுரை மாவட்டத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது. அதைப்போலவே நூறாவது சமத்துவபுரமும் இன்னும் சில நாட்களில் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களால் திறக்கப்படவிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் மதுரையிலே ஆரம்பித்திருக்கின்ற மூன்று உழவர் சந்தைகளும் மிகச்சிறப்பாக இருக்கக்கூடிய நிலையில் உள்ளன. என்னுடைய தொகுதியான மதுரை கிழக்குத் தொகுதியிலே, பல வட்டங்களுக்கு மத்தியிலே சிறப்பான இடம் அமைந்திருக்கிறது. அந்த இடத்திலே உழவர் சந்தை ஆரம்பித்தால் மக்களுடைய வரவேற்பும் அதிகமாக இருக்கும். ஆகவே அந்த இடத்தில் உழவர் சந்தையை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைக்கு எத்தனையோ பெருமைகள் உண்டு. அதிலே இந்த உழவர் சந்தை முதலில் 14-11-1999-ல் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் அங்கே தொடங்கி வைக்கப்பட்டது. தொடங்கக் கூடியவர்களுடைய கைராசி என்றுகூட சொல்வார்கள். ஆக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கிய காரணத்தாலே அந்த உழவர் சந்தைக்கு இவ்வளவு ஒரு மகத்துவம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதை யாரும் மறுக்க இயலாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினருடைய, இங்கே எழுப்பிய அந்த வினாவையொட்டிப் பார்த்தால், மதுரையிலே மட்டுமல்ல தமிழகத்திலே உழவர் சந்தை மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இப்பொழுது தொடங்கப்பட்டிருக்கின்ற 102 உழவர் சந்தைகள், இன்னும் தொடங்கவிருக்கின்ற அந்தப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்ற உழவர் சந்தைகள் இவையெல்லாம் விவசாயிகள் மத்தியிலே, நுகர்வோர் மத்தியிலே நல்ல வரவேற்பைப் பெற்று இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. சில பேருக்குத்தான் வயிற்றெரிச்சல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிப் பகுதியில் நடத்துகின்ற உழவர் சந்தைகளையெல்லாம் அந்த நகராட்சியிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அதுமட்டுமல்ல, விவசாயிகளுடைய சான்றிதழை வாங்கிக்கொண்டு, வியாபாரிகளே உழவர் சந்தையில் அதிக விலைக்கு, அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிற விதத்தில் விற்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு மாவட்ட

[2001 ஜனவரி 29

ஆட்சித் தலைவர் உடனுக்குடன் இன்ஸ்பெக்ஷன் செய்து நடவடிக்கை எடுத்து நியாயமான விலையில் காய்கறிகளை விற்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தையை நகராட்சிக்கோ அல்லது பேரூராட்சிக்கோ ஒப்படைக்கக்கூடிய திட்டம் எதுவும் இல்லை. அதேநேரத்தில் வியாபாரிகள் உழவர்கள் என்ற போர்வையில் உழவர் சந்தைக்குள்ளே வந்து அவர்கள் காய்கறிகளை விற்பனை செய்து இலாபம் பெறுவதற்கு இந்த அரசு அனுமதிக்காது.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல, உழவர் சந்தைகள் பல இடங்களில் சிறப்பாகச் செயல்பட்டாலும் பல்வேறு இடங்களிலே காய்கறிகள் போன்றவை அதிகமாக விளைச்சல் இல்லாத பகுதிகளிலே உழவர் சந்தைகள் சற்று சிறப்பாகச் செயல்படவில்லை என்கின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தால், இந்த உழவர் சந்தைகளை அமைக்கும்போது எந்தெந்தப் பகுதிகளிலே பெருவாரியாக இப்படிக் காய்கறி உற்பத்தி இருக்குமோ அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து உழவர் சந்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் நம்முடைய முதலமைச்சர் அறிவித்தபோதே முதல் கட்டமாக நகராட்சி பகுதிகளிலும், இரண்டாவது கட்டமாக பேரூராட்சிப் பகுதிகளிலும் அமைக்கப்படும், உழவர் சந்தை தொடங்கப்படும் என்றார்கள். இப்போது நாம் தொடங்குகிறபோது அந்தப் பகுதிகளிலே காய்கறிகள் எவ்வளவு உற்பத்தி ஆகின்றன என்ற அந்தக் கணக்கையும் பார்த்து, எத்தனை விவசாயிகள் அதிலே ஈடுபடுகிறார்கள் என்பதையும் பார்த்து, அந்த விவசாயிகளுக்குக் காய்கறிகளை உழவர் சந்தைக்குக் கொண்டு வருவதற்கான அடையாள அட்டையும் நாம் அவர்களுக்குத் தருகிறோம். அதைப்போல, நுகர்வோர்களையும் நாம் கணக்கிலே கொள்கிறோம். ஓர் உழவர் சந்தை தொடங்கி காய்கறிகள் வந்துவிட்டால் மட்டும் போதாது, பிறகு நுகர்வோர்கள் இருந்தால்தான் உழவர் சந்தைக்கு



2001 ஜனவரி 29]

வரக்கூடிய காய்கறிகளை அவர்கள் வாங்குவதன் மூலம் விவசாயிகளுக்கு அது பயன் தரும், நுகர்வோர்களும் பயனடைவார்கள் என்பதையெல்லாம் கணக்கிட்டுத்தான் எதற்கு முன்னுரிமை தருவது என்பதை முடிவு செய்து அந்த அடிப்படையிலே இப்போது தொடங்குகிறோம். ஆகவே, ஒரு சிறிய அளவிலே சில இடங்களில் சில சந்தைகளிலே காய்கறி வரத்து குறைவாக இருக்கிறது, நுகர்வோர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று சொன்னால், அது அந்த இடத்தினுடைய சூழ்நிலைக்கேற்பத்தான். ஆகவே, எப்படியிருந்தாலும் உழவர்களும், நுகர்வோர்களும் பயன்படக்கூடிய வகையிலே இன்றைக்கு உழவர் சந்தை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 87, திரு. செங்கை சிவம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**87—**

## நிலத்தடி நீரைச் சேமித்தல்

***26809—திரு செங்கை சிவம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலாற்றில் நிலத்தடி நீரைச் சேமித்து வைப்பது குறித்தான புதிய திட்டத்தை அரசு தயாரித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பாலாற்றில் நிலத்தடி நீரை சேமித்து வைப்பது குறித்த புதிய திட்டம் ஏதும் அரசினால் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் விரைவில் வெளியிடப்படும் என்று 4-3-1999 அன்று சென்னையிலே அமைச்சர் அவர்கள் பேட்டி அளித்திருக்கிறார்கள். அதையொட்டி கேட்கப்பட்ட கேள்வி இது. சென்னையிலே குடிதண்ணீர்ப் பிரச்சினை மழை பொய்த்துவிட்ட காரணத்தினாலே அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆந்திராவிலிருந்து கிருஷ்ணா நதி நீரைக்

கொண்டு வந்து, சென்னையிலே வழங்கி, சென்னை மக்களுடைய வாழ்விலே இன்றைக்கு பெரும் ஒளியேற்றியிருக்கிறது இந்த அரசு. ஆகவே, வணக்கத்திற்குரிய சென்னை மேயர் தளபதி ஸ்டாலின் அவர்களும், அமைச்சர் அவர்களும், மேலும் கிருஷ்ணா நதி நீரை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று ஆந்திர அரசைக் கேட்டுக்கொள்வதற்காக ஐதராபாத் சென்றார்கள். செல்வதற்குமுன் தண்ணீர் எவ்வளவு கிடைத்தது? அதற்குப் பின்னாலே, இவர்கள் அந்த அரசை அணுகிய பிறகு குடிநீர் எவ்வளவு இப்போது கிடைத்துக்கொண்டிருக்கிறது? எவ்வளவு நாள் இது கிடைக்கும்? அடுத்த மழை வருகின்ற வரையிலே சென்னையிலே இருக்கின்ற குடிநீர் பஞ்சம் தீர்க்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, transistor-ல்தான் two-in-one, three-in-one என்று சொல்வார்கள். கேள்வியே five-in-one என்று வைத்திருக்கிறார் அவர். (சிரிப்பு) பரவாயில்லை. இது பாலாற்றைப் பற்றிய கேள்வி. பாலாற்றிலே தடுப்பணை கட்டி குடிநீர் உற்பத்தி செய்யக்கூடிய அதாவது நிலத்தடி நீரை அதிகப்படுத்த முடியுமா என்பது. அதற்கு நான் பதில் அளிக்கிறபோது அப்படிப்பட்ட திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லையென்று சொன்னேன். இருந்தாலும், உலக வங்கியினிடத்திலே நாங்கள் ஒரு திட்டத்தைக் கொடுத்திருக்கிறோம். பாலாற்றிலே 10 இடங்களில் Check dam மாதிரி கட்டினால், தண்ணீரை நிறுத்துகிறபோது அதன்மூலமாக நிலத்தடி நீர் பெருகலாம் என்ற அந்தத் திட்டத்திற்கு இன்னும் எங்களுக்கு உலக வங்கியிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை. ஒரு யோசனைதான் தெரிவித்திருக்கிறோம். இரண்டாவது, அவர், நானும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களும் கிருஷ்ணா நதி தண்ணீர் குறித்து ஐதராபாத் சென்று வந்தது குறித்து தெரிவித்தார். நமக்கு 370-லிருந்து 400 Cusecs வரையிலே தொடர்ந்து Zero point-ல் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. அது தொடர்ந்து வரவேண்டுமென்று வற்புறுத்துவதற்காகத்தான் நாங்கள் அங்கே சென்றோம். எனவே, தொடர்ந்து தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அஞ்சத் தேவையில்லை, அடுத்த பருவமழை வருகிற வரையிலே கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்கு குடிநீராக, குடிக்கின்ற நீராக, உடை வெளுக்கின்ற நீராக உங்களுக்குக் கிடைக்கும் என்ற உறுதியை அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 88, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.





88—

## நீர்த்தேக்க ஏரி

***29699—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்டம், பள்ளிக்கரணை நீர்ப்பிடிப்புப் பகுதியில் புதியதாக நீர்த்தேக்க ஏரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், ஒக்கியம் மடுவு துரைப்பாக்கம் கிராமம் அருகே பள்ளிக்கரணை நீர்த்தேக்கம் அமைக்கும் திட்ட மதிப்பீடு ரூ.10.00 கோடிக்கு தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களால் தயாரிக்கப்பட்டு அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 9-55

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கரணையிலே, அதைச் சுற்றி இருக்கிற 25 கிலோ மீட்டர் தூரம் வரை பெய்கிற மழை நீர் எல்லாம் இங்கே வந்து தேங்கித்தான் முகத்துவாரத்திற்குச் செல்ல வேண்டும். அப்படிச் செல்கிறபோது, பக்கிங்காம் கனால் அந்நீரை ஏற்றுக்கொள்ளாத காரணத்தாலே அது நீண்ட நாள் அங்கே தங்கிச் செல்கிற அந்த இடங்களிலே எல்லாம் அரசினுடைய அபிவிருத்தித் திட்டங்களுக்காக அந்த இடங்களை அரசு எடுத்துக் கொண்ட காரணத்தினால், அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் அங்கு ஏரியை ஏற்படுத்திக் கொடுப்பார்களானால் அங்குள்ள மக்கள் பயன் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும். இந்தத் திட்டம் எப்போது நிறைவேறும் எப்போது டெண்டர் தரப்படும் என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

[2001 ஜனவரி 29

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கரணை பகுதியிலே ஒரு பக்கத்தில் மேடவாக்கம், இன்னொரு பக்கம் சோழிங்கநல்லூர், இன்னொரு பக்கம் வேளச்சேரி— இந்த இடங்களில் பெய்கிற மழைநீர் வந்துசேருகிற இடம் ஒரு சதுப்பு நிலமாக இருக்கக்கூடிய பள்ளிக்கரணை. அந்த இடத்திலே ஒக்கியம் மடுவிலே ஒரு சிறு அணை கட்டி தண்ணீரை தேக்கினால், அந்தத் தண்ணீர் நிலத்தடி நீராகப் பயன்படும்; குடிநீருக்குப் பயன்படும் என்பதுதான் இதனுடைய முக்கியம். பொதுப்பணித் துறையினுடைய முக்கிய நோக்கம், பாசனத்திற்குப் பயன்படுகிற நீர்நிலைகளை அமைப்பது, கால்வாய்களை வெட்டுவது, தூர் எடுப்பது, இந்தத் தண்ணீரால் எங்களுக்கு பாசனத்திற்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை. எனவே, பொதுப்பணித் துறை ஆய்வு செய்து இருக்கிற இதை, குடிநீர் வடிகால் வாரியம் நிறைவேற்றுவதற்கு அவர்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 89, திரு. ஏ.வி.ஏ. நாசர், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

89—

## எலக்ட்ரானிக் மீட்டர்

***35668—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகர ஆட்டோக்களில் எலக்ட்ரானிக் மீட்டர் கருவி பொருத்தும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகரில் இயக்கப்படும் ஆட்டோ ரிக்ஷாக்களில் 1-11-2000 வரை 770 ஆட்டோ ரிக்ஷாக்களில் எலக்ட்ரானிக் மீட்டர் கருவிகள் பொருத்தப்பட்டு இயங்கி வருகின்றன. முதல் கட்டமாக தாட்கோ, பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் தமிழ்நாடு



2001 ஜனவரி 29]

பிற்படுத்தப்பட்டோர் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றிடம் கடன் பெற்று ஆட்டோ பெர்மிட் பெற்றவர், ஆட்டோ உரிமம் மாற்றம் செய்பவர், பழைய ஆட்டோவிற்கு பதில் புதிய ஆட்டோ இயக்குபவர் ஆகிய இனங்களில் மட்டும் எலக்ட்ரானிக் மீட்டர் பொருத்த வலியுறுத்தப்படுகின்றது.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆட்டோக்களிலே உள்ள சாதாரண மீட்டர்களில் சுமார் 80 சதவீதம் அளவிற்கு மோசடி செய்யப்படுகிறது. ஒரு கிலோமீட்டருக்கு ரூ.3.50 என்று சொன்னால், சுமார் ரூ.2.50 வரை அதில் கூடுதலாக மோசடி செய்து வசூலிக்கப்படுகிறது. இந்த நிலையை மாற்றுகின்ற வகையிலே எலக்டிரானிக் மீட்டர்களை அனைத்து வாகனங்களிலும் பொருத்த வேண்டுமென்று உத்திரவிட்டு, அதிலேகூட இப்போது மோசடி வந்துவிட்டதாகச் சொல்கிறார்கள்; இருந்தாலும் இதையெல்லாம் பறக்கும்படை வைத்து கண்காணித்து, மக்கள் ஏமாற்றப்படுவதிலிருந்து காக்கப்பட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாளர்கள் பிரிகால் நிறுவனத்திடமிருந்து 10 டிஜிட்டல் மீட்டர்கள் பரீட்சார்த்தமாக பரிசீலிக்கப்படுவதற்காக கொடுக்கப்பட்டு, அவை 10 ஆட்டோகளுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. அவற்றினுடைய தரத்தைப் பற்றியும் இப்போது அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, இப்போது ஆட்டோ பெர்மிட்டுகள், அதை புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னால், அவர்கள் இதுபோன்ற டிஜிட்டல் மீட்டர்களைப் பொருத்தினால்தான் அவர்களுக்குக் கொடுப்போம் என்றும் சொல்லி இருக்கிறோம். புதிதாக பெர்மிட் வழங்குகிறபோது, புதிதாக பெர்மிட் வழங்குவதையே கூடுமானவரையில் நிறுத்தி வைத்து இருக்கிறோம்; அரசாங்கத்திலே இருந்து கடன் பெறுபவர்களுக்கு, புதிய பெர்மிட் வழங்கப்படுகிறது; அப்படி வழங்கப்படுகிறபோது, அவர்கள் இதுபோன்ற டிஜிட்டல் மீட்டர்களை பொருத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 90, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

[2001 ஜனவரி 29

90—

## இருவழிச் சாலை

**•28109—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்-கொட்டாம்பட்டி-நத்தம் சாலையை இருவழிச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பணியினை பராமரிப்பு சாலைகளை இயந்திரங்களின் மூலம் புதுப்பித்தல் (Mechanised Relaying of Roads) என்ற திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யும் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்தச் சாலை, திண்டுக்கல்-கொட்டாம்பட்டி-நத்தம் சாலை, திருச்சியிலிருந்து மதுரை செல்லக்கூடிய அந்த நேஷனல் ஹைவேஸ் சாலையை இணைக்கக்கூடிய சாலை. மழைக்காலங்களில் நத்தம் அருகில் இருக்கக்கூடிய சில குன்றுகள் மூலமாக ஏற்படக்கூடிய மண் சரிவால் போக்குவரத்து முழுமையாகவே மழைக்காலங்களில் பாதிக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சாலையைப் பற்றி நன்றாக அறிவார்கள். அதை விரைந்து செய்வதற்கும், மழையினால் மண் சரிவு ஏற்படக்கூடிய அந்த இடங்களில் சிறு சிறு பாலங்களைக் கட்டுவதற்கும் அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தோடு இணைத்து இருக்கிறார்களா? அப்படி இணைக்கப்படுமேயானால், இந்த ஆண்டு அதை நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திண்டுக்கல்-கொட்டாம்பட்டி சாலை, மேலூர்-



2001 ஜனவரி 29]

மதுரை தேசிய நெடுஞ்சாலையை இணைக்கின்ற சாலை மட்டுமல்ல; திண்டுக்கல்லிலே இருந்து காரைக்குடி வரையில் மாநிலச் சாலையாக அது அறிவிக்கப்பட்டு, மொத்தம் 75 கிலோ மீட்டர் தொலைவு இருக்கிறது; அதிலே பெரும்பகுதி இருவழிச் சாலையாகத்தான் இருக்கிறது. குறிப்பாக காரைக்குடியிலிருந்து கொட்டாம்பட்டி வரை இருவழிச்சாலைதான். கொட்டாம்பட்டியில் இருந்து நத்தம்வரை 6 கிலோமீட்டர் மட்டும் ஒருவழிச் சாலையாக இருக்கிறது.

முற்பகல் 10-00

அதை இப்போது இருவழிச் சாலையாக மாற்றுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு டெண்டரும் கோரப்பட்டிருக்கிறது. இது தவிர 1 கோடியே 95 இலட்சம் ரூபாய்க்கு அந்தச் சாலையை mechanised முறை மூலமாக, அதாவது C.M.P. மூலமாக மேம்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மண் சரிவுகளை சரி செய்வதற்கும், பாலங்கள் கட்டுவது குறித்தும் ஆலோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்.91, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

91—

## சுற்றுச்சாலை

**•28905—திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தொகுதியில் குத்துக்கல்வலசை-நான்குமுக்கு சந்திப்பில் சுற்றுச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2001 ஜனவரி 29

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதியில் குத்துக்கல்வலசை சந்திப்பில் சுற்றுச்சாலை அமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது. வருடத்தில் 5 மாதம் குற்றால சீசனை முன்னிட்டும், வருடா வருடம் ஐயப்ப சாமி கோயிலுக்குச் செல்லுகின்ற இலட்சக்கணக்கான வாகனங்கள் இந்தச் சாலையைக் கடந்து செல்கின்றபோது விபத்துகள் நடப்பது சர்வசாதாரணமாக உள்ளது. எனவே, இதைக் கருத்தில் கொண்டு, உடனடியாக சுற்றுச்சாலை அமைக்க அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற இந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டு மத்திய அரசினுடைய தரைவழிப் போக்குவரத்து துறையினிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சுற்றுச்சாலை அமைப்பதற்கு கிட்டத்தட்ட 3.6 கிலோ மீட்டர் வரையில் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே அங்கு இருக்கக்கூடிய போக்குவரத்து வாய்ப்புகளையும் அறிந்து மத்திய அரசுக்கு, மத்திய தரை வழிப் போக்குவரத்து துறைக்கு இதுகுறித்து செய்தி அனுப்பப்படும். அது மத்திய அரசால் பரிசீலிக்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 92, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**92—**

## ஆலய இடத்தை அளித்தல்

***43343—திரு. குத்தாலம் பி. கல்யாணம் :**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை நகராட்சி மன்றத்தின் சார்பில் பேருந்து நிலையம் அமைக்க அருள்மிகு பரிமள ரெங்கநாதர் ஆலயத்திற்குச் சொந்தமான இடத்தைக் கேட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக மேற்கண்ட இடத்தினை நகராட்சிக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?



2001 ஜனவரி 29]

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், திருஇந்தளூர் அருள்மிகு பரிமள ரெங்கநாதர் சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 3.91 ஏக்கர் புன்செய் நிலத்தினை புதிய பேருந்து நிலையம் அமைக்க விற்பனை செய்வதற்கான செயற்குறிப்பு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரிடமிருந்து வரப்பெற்று 13-11-2000 நாளிட்ட அரசு கடித எண் 381-ன்படி மேற்படி நிலத்தினை மயிலாடுதுறை நகராட்சிக்கு ரூ. 2,81,02,734-க்கு மட்டும் விற்பனைத் தொகை வரப்பெற்ற பின்னரே நிலம் அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் விற்பனை செய்ய இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மயிலாடுதுறை பேருந்து நிலையப் பிரச்சினை குறித்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அந்த இடத்தை நம்முடைய இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வழங்க வேண்டிய அவசியம் இருக்கிற ஒரு நிலையை இங்கே நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அது ஒரு மாவட்டத் தலைநகருக்கு ஈடாக இருக்கிற ஒரு நகரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவற்றையெல்லாம் சொல்லக்கூடாது. அவருடைய பதிலுக்கு மேலே என்ன சப்ளிமென்டரியோ, அதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** இந்தப் பிரச்சினை குறித்த முழுமையான விவரங்கள், இந்தப் பேருந்து நிலையத்தை அமைக்க உத்தரவு வழங்குகிற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். 3 இடங்களாக இருப்பதில், தனியார் இடம், அரசு இடம், வழங்கத் தயாராக இருக்கிறார்கள். எனவே, இந்தப் பேருந்து நிலையம் அமைய இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மூலம் ஒரு முன் நுழைவு அனுமதி வழங்கினால் இந்தத் திட்டம் விரைவில் நிறைவேறக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கலந்து பேசி, முன் நுழைவு அனுமதி வழங்கி, இந்தத் திட்டம் நிறைவேற ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[2001 ஜனவரி 29

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் ஏராளமான இனங்களுக்கு முன் நுழைவு அனுமதி வழங்கி, பலரிடமிருந்து அந்தத் தொகை வரப் பெறாமல் நிலுவையில் நிற்கிறது. பெரும்பாலோர் அந்தத் தொகையை அரசிலிருந்து இன்னொரு அரசுத் துறைக்கு மாற்றுவதற்கு தயக்கம் காட்டி நிலுவையிலே வைத்திருக்கிறார்கள். அதனால்தான் இந்த 2 கோடியே 81 இலட்ச ரூபாய் தொகையை முழுமையாக வழங்கியவுடன் உடனே நிலம் வழங்கப்படும். எனவே, நாங்கள் ஏற்கெனவே உங்களுக்கு வழங்கியிருக்கிறோம். நீங்கள் தொகையை வழங்கினால் அடுத்த நொடி நீங்கள் நிலத்தில் இறங்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 93, திரு. கு. மனோகரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

93—

## மத்திய கூட்டுறவு வங்கி

***36451—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதியில் மானியதஅள்ளி ஊராட்சி, ஜருகு கிராமத்தில் மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றை தொடங்கிட முயற்சி மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், ஜருகு கிராமம் ஒரு காட்டுப் பகுதி நிறைந்த கிராமம் ஆகும். ஜருகு கிராமத்தினைச் சுற்றி சுமார் 7, 8 ஊராட்சிகள் உள்ளன. மானியதஅள்ளி, பாளையம்புதூர்,



2001 ஜனவரி 29]

சாமிசெட்டிபட்டி, ஏலகிரி, சிவாடி, தொக்குபோதனஅள்ளி, பாதலஅள்ளி என்று இந்த 7, 8 ஊராட்சிகளைச் சார்ந்த கிராம மக்கள் எல்லாம் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கிளையை அடைய 30 கிலோமீட்டர் தருமபுரி அல்லது நல்லம்பள்ளி செல்ல வேண்டிய நிலையில் உள்ளதால், விவசாயிகளும், பொதுமக்களும் பயன் அடையும் வகையில் ஜருகு கிராமத்தில் ஒரு மத்திய கூட்டுறவு வங்கியின் கிளையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொப்பூர், நல்லாம்பள்ளி ஆகிய இந்த இடங்களிலே ஏற்கெனவே மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கிளைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஜருகு கிராமத்தில் புதிதாக ஒரு கிளை திறக்கப்படுமானால் அந்த வங்கிகள் வியாபார ரீதியாக பாதிக்கப்படும் என்று எனக்கு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஜருகு கிராமத்தில் அங்கே புதிய கிளை திறக்கப்படுமானால், நிறைய டெப்பாசிட்டுகள் கிடைக்கும் என்ற ஓர் உத்தரவாதத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களானால், அதைப்பற்றி மறுபரிசீலனை செய்து திறக்க இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 94, திரு. ஆ.செ. மணிக்கண்ணன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

94—

## நவீன அரிசி ஆலை

**39048—திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூர் தொகுதியில் நவீன அரிசி ஆலை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2001 ஜனவரி 29

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநாவலூர் தொகுதியில் நவீன அரிசி ஆலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதி பெரும்பான்மையாக விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய ஒரு தொகுதி. அங்கே திறந்தவெளி கிடங்கு ஒன்று இருக்கிறது. ஒரு கிலோ மீட்டர் தூரம் அருகில் இரயில்வே போக்குவரத்து வசதி இருக்கின்ற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இங்கு இலட்சக் கணக்கான டன்கள் நெல் கொள்முதல் செய்யும் வசதி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே தமிழ்நாடு அரசினுடைய புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் இந்த நவீன அரிசி ஆலையை அமைத்தால் நல்ல பயனுள்ளதாக இருக்கும். எனவே, இதை மறுபரிசீலனை செய்து அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியிலே ஒரு நவீன அரிசி ஆலை இயங்கிக் கொண்டிருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக அந்த அரிசி ஆலை அங்கே இயங்கக் கூடாது என்று உத்தரவிட்ட காரணத்தால் அந்த அரிசி ஆலையை மாற்றி நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான திருக்கோயிலூர் அருகில் இருக்கின்ற இடத்திலே மாற்றியமைப்பதற்காக, இப்போது அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. விழுப்புரம் மாவட்டத்திற்கு ஒரு நவீன அரிசி ஆலை என்பது இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது. நிதிநிலைமையை அனுசரித்து வருங்காலத்திலே அதைப்பற்றி மறுபரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 95, திரு. கோ. மோகனதாசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



223686. 26.2.2008

2001 ஜனவரி 29]

95—

## வட்டாட்சியர் அலுவலகம்

***36332—திரு. கோ. மோகனதாசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி வட்டம், பொறையாறில் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட அரசு முன்வருமா? அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இட வசதியின்மை காரணமாக, தரங்கம்பாடி வட்டாட்சியர் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் வரப்பெற்று நிதிநிலை காரணமாக 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இப்பணி நிதிநிலையைப் பொறுத்து மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் எப்போது தொடங்கப்படும் என்பதைக் குறிப்பிட்டுக் கூற இயலாது.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகம் பொறையாறில் இருக்கிறது. போதுமான இடவசதி இல்லாமலும், அந்த அலுவலகக் கட்டடம் பழுது ஏற்பட்டும் அலுவலர்கள் உட்கார்ந்துகூட செயல்பட முடியாத நிலையில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு முன்வருவார்களா, மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறையாறிலே வட்ட அலுவலகம் ஏற்கெனவே சொந்தக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. துணை வட்டாட்சியர் அலுவலகமாக இருந்து இப்போது வட்டாட்சியர் அலுவலகமாக நிலை உயர்த்தப்பட்டிருக்கிறது. போதுமான இடவசதி இல்லாத நிலை உள்ளது

[2001 ஜனவரி 29

என்பது உண்மைதான். பழுது அடைந்திருக்கிறது என்பதும் உண்மைதான் எனவே, புதிய கட்டடம் கட்டுவதற்காக நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நிதிநிலையின் காரணமாக இந்தப் பணி 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படவில்லை. மற்றும் வட்டாட்சியர் குடியிருப்புகள், அதுபோல ஏராளமான கட்டடங்கள் இந்த ஆட்சியிலே வந்து கட்டப்பட்டிருந்தாலும், நிதிநிலை நெருக்கடி காரணமாக இது கட்டப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் அரசின் கவனத்தில் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 96, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்

96—

## கடன் வசதி

***29446—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலம் வழங்கப்படும் கடன் வசதி அனைவருக்கும் கிடைக்க கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 10.10

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆண்டிமடம் தொகுதியிலே வீடு கட்டுவதற்காக கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலமாக மனுச் செய்து பல ஆண்டு காலமாகக் காத்திருக்கிறார்கள். போதுமான நிதி வசதி இல்லை. நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, கடன் தர இயலவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது மத்திய அரசாங்கமானது குறைந்த வட்டியிலே கிராமப்புற மக்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டத்தை எல்லாம் அறிவித்து வருகிறது. எனவே, மத்திய அரசாங்கத்தினுடைய அந்தத்



2001 ஜனவரி 29]

திட்டத்தை தமிழ்நாடு வீட்டு வசதி சங்கத்தின் மூலமாகவாவது இணைத்து, வீடு கட்ட கடன் கேட்கின்றவர்களுக்கு எல்லாம் உடனடியாக கடன் உதவி வழங்க கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் முன்வருமா? இல்லையென்றாலும், போதுமான நிதியை மாநில அரசாவது ஒதுக்கீடு செய்து இந்தக் கடனுதவியை மக்கள் பெறுதற்கு வாய்ப்பு அளிக்குமா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹட்கோ போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று மாவட்டவாரியாக எல்லா சங்கங்களுக்கும் கடன் தொகை பகிர்ந்து அளிக்கப்படுகிறது. ஆண்டிமடத்திலே தனியாக கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் இல்லை; உடையார்பாளையத்திலேதான் இருக்கிறது. வருங்காலத்திலே அந்தச் சங்கத்திற்கும் அதிக அளவில் கடன் தொகை ஒதுக்க அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2001-2002 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவையில் நுழைந்தபோது உறுப்பினர்கள் எழுந்து நின்று அவரை வரவேற்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 97, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

97—

## சிறுதொழில் வளாகம்

***34466-திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், சின்னமனூர் பகுதியில் கூட்டுறவு சிறுதொழில் வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2001 ஜனவரி 29

(அ) மற்றும் (ஆ) சின்னமனூர் பகுதியில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் சின்னமனூருக்கு அருகில் தேனி மற்றும் ஆண்டிப்பட்டியில் ஏற்கெனவே சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைக்கப்பட்டுள்ளதாலும், ஆண்டிப்பட்டியிலுள்ள பெரும்பாலான தொழிற்கூடங்கள் மற்றும் காலிமனைகள் இன்னமும் ஒதுக்கப்படாமல் உள்ளதாலும், இப்பகுதியிலுள்ள மக்கள் விவசாயம் மற்றும் இதர தொழில்களில் ஈடுபட்டுள்ளதாலும், சின்னமனூரில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது. எனினும் சின்னமனூர் பகுதியில் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் முன்வந்தால், இப்பகுதியில் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அவர்களும் சிட்கோ மூலம் அமைக்கின்ற தொழிற்பேட்டை நிலத்தினுடைய விலை சிறிது அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத் தொழிற்பேட்டை அமைக்கலாம் என்று ஆலோசனை சொல்லியதன் வாயிலாக சின்னமனூரில் இருக்கக்கூடிய Chamber of Commerce, Lions Club விவசாயிகள் சங்கம் போன்ற சங்கங்களை அணுகி, அவர்களை அழைத்து வைத்து, தொழில் முனைவோர் கூட்டம் ஒன்றைக் கூட்டி, அதற்குப் பின்னால் மாவட்ட தொழில் மையத்தின் சார்பாகவும் இரண்டு முறை அங்கே கூட்டத்தைக் கூட்டி, அவர்கள் அனைவரும் தொழில் தொடங்குவதற்கு தயாராக இருப்பதாகக் கூறி, அவர்களும் உறுப்பினர் சந்தாத் தொகையாக 5 ஆயிரம் ரூபாயைக் கட்டுவதாகவும் குறிப்பிட்டிருந்தார்கள். அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மின்சார வாரிய அதிகாரிகள், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் ஆகிய அனைவரும் நேராகச் சென்று நிலத்தினுடைய விலை மிகவும் குறைவாக இருக்கின்ற சின்னமனூர்-எரசக்க நாயக்கனூர் சாலையில் ஒரு இடத்தையும் பார்த்து, மின் வசதி பெறுவதற்கும், குடிநீர் வசதி பெறுவதற்கும் உரிய இடங்களையும் பார்த்தார்கள். அந்த நிலத்தினுடைய உரிமையாளர்கள் குறைந்த விலைக்குக் கொடுப்பதாகச் சொல்லியதன் காரணமாக அதை அங்கே அமைப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்வதாக இருந்தது. அங்கே பலர் விவசாயம் சம்பந்தப்பட்ட தொழில்களை அமைப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். ஆகவே, தொழிற்பேட்டை அமைப்பதற்கு, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர்



2001 ஜனவரி 29]

அவர்கள் முன் வருவார்களா, அதற்கு அனுமதி பெறுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, கடந்த இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்னால் சின்னமனூர் பகுதியிலே, அதுவும் குறிப்பாக முத்தநாபுரத்திலே 68 ஏக்கர் நிலம் சிட்கோவால் பார்க்கப்பட்டு, அவர்கள் தொழில் கூட்டுறவு தொழில் பேட்டை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கிணங்க இரண்டு கூட்டங்கள் அங்கே கூட்டப்பட்டன. அவர்கள் முழுமையாக தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அமைக்க வேண்டுமென்றுதான் கேட்டுக் கொண்டார்கள். சிட்கோ மூலமாக தொழிற்பேட்டை அமைப்பதற்கு அவர்கள் விருப்பம் தெரிவிக்கவில்லை. எனவே, நம்முடைய அலுவலர்கள், தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அமைப்பது சாத்தியம் இல்லை என்ற காரணத்தினால், சிட்கோ மூலமாக அமைக்கலாம் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் தொழில் முனைவோர்கள் முன்வந்தால், அந்த உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டி, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்தால், நிச்சயமாக அரசு அதைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்.98, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**98—**

## விடுதலை இயக்க வரலாறு

*4894—**திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய விடுதலை இயக்க வரலாற்றில் தமிழகத்தின் பங்கை, இயக்கத்தின் தோற்றம் முதல் 1947 வரை வெளியிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேசிய விடுதலை வரலாற்றில் தமிழகத்தின் பங்கினை இயக்கத்தின் தோற்றம் முதல் 1947 வரை தொகுத்து வெளியிட திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

முற்பகல் 10-15 [2001 ஜனவரி 29

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய விடுதலை இயக்கத்தில் தமிழகம் மதிப்புமிக்க பங்களிப்பைச் செலுத்தியிருக்கிறது என்பது வரலாற்று உண்மையாகும். ஆனால் தமிழகத்தின் துரதிருஷ்டம், தமிழ்நாட்டின் விடுதலை இயக்க வரலாற்றில் தமிழ்நாட்டின் ஈடுபாடு பங்களிப்பு உரியபடி பதியப்படவில்லை. கௌரவிக்கப்படவில்லை என்பதை நாம் பார்க்கிறோம். எனவே, அவற்றை உரியபடி தொகுத்து வெளியிட வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால், மாநில அரசு அத்தகைய கருத்து பரிசீலனையில் இல்லை என்று அறிவித்திருக்கிறது.

நான் ஒரே ஒரு விஷயத்தை வேண்டுகோளாக வைக்கவிரும்புகிறேன். சமீபத்திலே ஈரோட்டைச் சார்ந்த ஒரு புகழ்பெற்ற துடிப்புள்ள இளம் வழக்கறிஞர் ஸ்டாலின் குணசேகரன் என்பவர் அடிநாட்களிலிருந்து இன்று வரையிலுமான, அதாவது 1947 வரையிலுமான விடுதலை போராட்ட வரலாற்றில் தமிழ்நாட்டின் அனைத்து பங்கையும் தொகுத்து வெளியிட இருக்கிறார்கள். அது வெளியிடப்படவிருக்கிறது. இன்னும் வெளியிடப்படவில்லை. அதற்குகூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதனுடைய முதல் தொகுதியை முழுமையாகப் படித்து, அவற்றின் சிறப்பை உணர்ந்து, அதற்கு அணிந்துரை வழங்கியிருக்கின்றார்கள். அதேபோல் பாரத ரத்னா மறைந்த சி. சுப்ரமணியம் அவர்களும் முன்னுரை வழங்கியிருக்கின்றார்கள். அது இரண்டு பாகமாக, 1,200 பக்கங்கள் கொண்டதாக வெளி வருகிறது. அரிய 300 புகைப்படங்கள் அதில் இடம் பெற்றிருக்கிறது. அதில் நான் ஒன்றே ஒன்று குறிப்பிட விரும்புவது என்னவென்றால், இதுவரையிலும், இந்திய தேசிய விடுதலை இயக்க வரலாறு என்பது 1857-ல் தொடங்கியதாகத்தான் கொள்ளப்படுகிறது. உலகப் புகழ்பெற்ற மேதை கார்ல்மார்க்ஸ் கூட 1857-ல் நடைபெற்றதை, முதல் விடுதலைப்போர் என்றுதான் குறிப்பிடுகிறார். ஆனால், உண்மை எனனவென்றால், முதல் விடுதலைப் போருக்கான தீ கங்கு தமிழ்நாட்டில்தான் தொடங்கிற்று என்பது அந்தப் புத்தகத்தில் ஆதாரப்பூர்வமாக நிரூபித்து காட்டப்பட்டிருக்கிறது எனவே, நான் வேண்டிக்கொள்வது எல்லாம், மாநில அரசு, இரண்டு பாகங்களாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அணிந்துரையோடு வெளியிடப்படவிருக்கின்ற அந்தப் புத்தகத்தையே மாநில அரசின் அங்கீகாரம் பெற்று ஒன்றாவும், அதேபோல் எல்லா லைபரிகளிலும், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலுமுள்ள அனைத்து இடங்களுக்கும் வழங்குவதற்குரிய



2001 ஜனவரி 29]

பொருத்தமான நடவடிக்கையை மாநில அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற தமிழகத் தியாகிகள் குறித்த விவரங்கள் அடங்கிய யார், எவர் என்ற நூலினை 1973 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் பொதுத்துறை வெளியிட்டுள்ளது. இது மூன்று தொகுதிகளை உள்ளடக்கியதாகும். இதில் 4488 தியாகிகளைப் பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளன. அது மாத்திரமல்லாமல், ம.பொ.சி. அவர்கள் ‘விடுதலைப் போரில் தமிழகம்’ என்னும் பெயரில் ஒரு வரலாற்று நூலை வெளியிட்டுள்ளார். அதனை அரசு ஏற்று நாட்டுடைமையாக்கி, அதற்காக எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு உள்ளது. இதிலேயும் தமிழகத்தினுடைய வரலாறுகள் முழுமையும் அடங்கியிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல் தியாகிகளைப் போற்றுவதில் நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு நிகரானவர்கள் இந்தியாவில் யாருமில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு எத்தனையோ உதாரணங்களை எங்களால் சொல்ல முடியும். 1957-ல் சிப்பாய் கலகம் என்று சொன்னாலும்கூட, 1806 ஆம் ஆண்டிலேயே வேலூர் கோட்டையில் திப்பு சுல்தானுடைய வாரிசுகள் அடைக்கப்பட்டபோது, ஆங்கிலேயரால் அவர்கள் படுகொலை செய்யப்பட்டு, அங்கேயிருக்கிற கிணற்றில் 1,500 பேர் புதைக்கப்பட்டதாக வரலாறு உண்டு. அந்த வரலாற்றையெல்லாம் புதைபொருள் ஆய்வு போல ஆராய்ச்சி செய்து, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டுமென்று சொல்லி, வேலூர் கோட்டைக்குப் பக்கத்தில், சென்னையிலிருந்து, பெங்களூர் செல்லும் சாலையில் தியாகிகளை நினைவுகூரும் வகையில் வேலூர் சிப்பாய்க் கலகம் என்ற முதல் சுதந்திரப் போராட்ட நினைவுத் தூணை அமைத்து திறந்து வைத்தார்கள். ஆகவே, 1806 ஆம் ஆண்டிலேயிருந்து, இந்த நாட்டு விடுதலைக்காகப் போராடிய தியாகிகளை நினைவுகூர்ந்தவர் இவர்தான். அதுமாத்திரமல்லாமல், வீரபாண்டிய கட்டபொம்மனாக இருந்தாலும் பூலித்தேவனாக இருந்தாலும் தியாகி விசுவநாததாஸ் -ஆக இருந்தாலும், மருதுபாண்டியர்களாக இருந்தாலும் ஆக எத்தனையோ தியாகப் பெருமக்களுக்கு வரலாற்று ரீதியிலான நினைவுச் சின்னங்களை எழுப்பி பெருமை சேர்த்திருப்பவர் இவர்தான். அதுமாத்திரமல்லாமல், சென்னை, கிண்டியிலே தியாகிகளுடைய மணிமண்டபத்தை எழுப்பி தமிழகத்தினுடைய விடுதலைக்காக போராடிய எத்தனையோ.....

[2001 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் எழுப்பிய அந்தக் கோரிக்கையைப் பற்றி, அரசின் பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் சொன்னார். அது குறித்த விளக்கங்களை சுப்பராயன் வழங்கிய பிறகு அவை அரசின் பரிசீலனைக்கு உட்படும் என்பதையும், விரைவில் அது அரசின் சார்பாக, தக்க முறையிலே வெளியிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 99, திரு. டி. அமரமூர்த்தி. மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**99—**

## குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல்

***2125—திரு. டி. அமரமூர்த்தி :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, இலுப்பையூர் ஊராட்சி, பொய்யாதநல்லூர் கிராமத்தில் 1974-இல் கட்டித் தரப்பட்ட ஆதிதிராவிட குடியிருப்புகள் பழுதுபார்த்து தரப்படுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரியலூர் தொகுதி, இலுப்பையூர் ஊராட்சி பொய்யாதநல்லூர் கிராமத்தில் 1974-ல் கட்டித் தரப்பட்ட ஆதிதிராவிடர் குடியிருப்புகள் பழுதுபார்க்கும் திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் செயல்படுத்தப்படுவதில்லை.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974-ல் கட்டப்பட்ட, அரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட



2001 ஜனவரி 29]

மக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் அனைத்தும் மிகவும் பழுதடைந்து என்றைக்கு விழுமோ என்கின்ற சூழ்நிலை இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டால் நீங்கள் ஆதிதிராவிடர் நலத் துறையிடம் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். அந்தக் கிராமங்கள் மட்டுமல்ல, பல்வேறு கிராமங்கள் மணக்கால், கோவிந்தபுரம், காதைப்பாக்கம், புன்னங்குடி போன்ற ஆதிதிராவிடர் வசிக்கின்ற தொகுப்பு வீடுகள் என்றைக்கு விழுமோ என்ற சூழ்நிலையில் இருக்கின்றன. ஆகவே, ஆதிதிராவிடர் வசிக்கும் வீடுகளுக்கு ஆதிதிராவிடர் துறையின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து அவற்றைச் செப்பனிடுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகளுக்கு கான்கிரீட் மேற்கூரை கட்டுவதற்காக இந்தத் துறை பொறுப்பேற்றிருக்கிறது. அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களும் கடந்த காலத்தில் ரூபாய் 4,000 தான் ஒதுக்கப்பட்டிருந்ததை ரூ.12,000 ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். கட்டப்பட்ட வீடுகளுக்கு பழுது நீக்கம் செய்வதற்காக தனியாக நிதி ஒதுக்கப்படுவதில்லை. ஆகவே, துறையின் சார்பாக கட்டிக் கொடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 100, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**100—**

## மேல்நிலைப் பள்ளியாக்குதல்

***33578—திரு. செ. இராமலிங்கம் :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கூகூர் ஆதிதிராவிட நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது உயர்த்தப்படும்?

[2001 ஜனவரி 29

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கூகூர் ஆதிதிராவிட நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூகூர் ஆதிதிராவிட நல உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு மாவட்டக் கல்வி அதிகாரி மூலமாகவும், துறை மூலமாகவும் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும், சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் வேறு மேல்நிலைப் பள்ளியே கிடையாது. சுமார் 50 கிராம மாணவர்கள் இங்கே பயிலுகின்றார்கள். எனவே, இதன் அவசியத்தை உணர்ந்து வருகிற கல்வி ஆண்டிலாவது இதை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா? அதோடு தற்போது இந்தப் பள்ளியில் இருக்கின்ற 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இந்த ஆண்டிலேயே பொதுத் தேர்வு மையம் அங்கே ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டில் 25 ஆதிதிராவிட நல தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 5 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், மற்றும் 2 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இந்த 2000-2001 ஆம் ஆண்டில் அரசு ஆணையில் தஞ்சாவூர் மாவட்டம் கூகூர் இடம் பெறவில்லை. எதிர்காலத்தில் அது குறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும். அதே நேரத்தில், இந்தப் பள்ளிக்குத் தேர்வு மையம் அளிக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு முன்மொழிவு அனுப்பினால் அதற்குரிய ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2001 ஜனவரி 29]

## 2. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2001-2002, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2001-2002 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நம்முடைய சட்டமன்ற விதி 88-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உட்கார்ந்தே இந்த அறிக்கையை அளிக்கலாம் என்று அனுமதி அளிக்கின்றேன்.

**மாண்புமிகு கலைஞர். மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தியத் திருநாடு குடியரசுப் பொன்விழா நிறைவு ஆண்டினைக் கொண்டாடி உள்ள இவ்வேளையில் தமிழக அரசின் 2000-2001 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டையும் 2001-2002ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தையும் இப்பேரவைமுன் வைப்பதில் பெருமிதம் கொள்கிறேன். வரும் நிதியாண்டில் முதல் ஆறு மாதங்களுக்கான செலவினங்களுக்கு மானிய அனுமதி இதன்மூலம் பெறப்படும். தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் புதிய சட்டப்பேரவையின் முழு அளவிலான வரவு-செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும்.

2. இந்த அரசு,

அருவினை யென்ப உளவோ கருவியாற்
கால மறிந்து செயின்

(தேவையான சாதனங்களுடன் உரிய நேரத்தையும் அறிந்து செயல்பட்டால் முடியாதவை என்று எவையுமே இல்லை.)

எனும் அய்யன் திருவள்ளுவரின் அறிவுரையை அகத்தே பதித்து, தந்தை பெரியாரின் சமுதாயக் கண்ணோட்டம், பேரறிஞர் அண்ணா வகுத்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றிலிருந்து சிறிதும் பிறழாமல் மாற்றுக் கருத்துடையோரை மதித்தும் அவர்தம் ஏற்கத் தக்க கருத்துக்களை ஏற்றுக் கொண்டும் தன்னடக்கத்துடனும் தளரா உறுதியுடனும் மத நல்லிணக்கமும், மனித நேயமும் போற்றி மத சார்பற்ற நிலையில் தமிழுக்காகவும், தமிழ்நாட்டு மக்களுக்காகவும் பணியாற்றி வந்துள்ளது.

2. குடியரசு தினத்தை நாட்டுமக்கள் குதூகலத்துடன் விழா எடுத்துக் கொண்டாடிக் கொண்டிருந்த நாளில் இந்தியாவின் பல பகுதிகளில் நில நடுக்கம் தோன்றி குறிப்பாக குஜராத் மாநிலத்தில் பெரும் சேதமும்,

பல்லாயிரக்கணக்கில் உயிரிழப்பும் ஏற்பட்டுள்ள கொடுமையான நிகழ்ச்சி
உருவாகியுள்ளது. இது குறித்து தமிழக மக்களின் உருக்கமிகு இரங்கலைத்
தெரிவிப்பதுடன் குஜராத் மாநில நிலநடுக்க விளைவுகளின் நிவாரணப்
பணிகளுக்குக்காக தமிழக அரசின் சார்பில் ஐந்து கோடி ரூபாய்
வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.
பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மருத்துவ உதவி, பொருள் உதவி
ஆகிய அனைத்து உதவிகளையும் செய்ய இந்த அரசு முன்வந்துள்ளது.
மேலும் தமிழக அரசு மூலமாக நிவாரண நிதி வழங்க விரும்புவோர்
"குஜராத் நிலநடுக்க நிவாரண நிதி" (Gujarat Earthquake Relief Fund)
என்ற பெயரில் சென்னை தலைமைச்செயலகத்தில் உள்ள பொதுத் துறைச்
செயலாளர் அவர்களுக்கு காசோலைகளாகவோ. வங்கி
வரைவோலைகளாகவோ அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## பொருளாதார வளர்ச்சி

4. இந்த ஐந்தாண்டுகளில் இம்மாநிலம் வலுவான பொருளாதார
நிலையை அடைவதற்கு "மனித நேயத்துடன் இணைந்த பொருளாதார
வளர்ச்சி" (Economic Development with a human face) என்ற இந்த அரசின்
கொள்கை காரணமாயிருந்துள்ளது. 1996-97 ஆம் ஆண்டிற்கும்
1998-99 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், நிலையான
விலைகளின் அடிப்படையில் (at constant prices) மாநிலத்தின் மொத்த
உற்பத்தியின் (Gross State Domestic Product) வளர்ச்சி வீதம் சராசரியாக
ஆண்டொன்றுக்கு 6.05 சதவீதமாக இருந்தது. இந்த அரசு எடுத்துள்ள
பல நடவடிக்கைகளின் காரணமாக, 1999-2000 ஆம் ஆண்டில் இது 7.04
சதவீதமாக அதிகரித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில்
பொருளாதார வளர்ச்சி மிக உயர்ந்துள்ள மூன்று மாநிலங்களில் ஒன்றாகத்
தமிழகம் விளங்குகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

5. இம்மாநிலத்தில் தனிநபர் வருமானம் 1995-96ல் ரூபாய் 11,894
ஆக இருந்து 1999-2000 ஆம் ஆண்டில் ரூபாய் 18,786 ஆக
அதிகரித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## மத்திய - மாநில நிதி உறவுகள்

6. பதினோராவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளால் தமிழகத்திற்கும்
பெருத்த நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. மத்திய அரசின் மொத்த வரி
வசூலில் மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய பங்கை 40 சதவீதமாக



நிர்ணயிக்கும்படி தமிழக அரசு கோரியிருந்தது. இதற்கு மாறாக பதினோராவது நிதி ஆணையம் நிகர வரி வசூலில் 29.5 சதவீதம் மட்டுமே பகிர்ந்தளிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. அத்துடன் அந்த நிதியையும் பகிர்ந்தளிப்பதற்கு பதினோராவது நிதி ஆணையம் நிர்ணயித்த வழிமுறைகளில்; பின்தங்கிவிட்ட மாநிலங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் தமிழகத்தைப் போன்று சிறப்பாகச் செயல்படும் மாநிலங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக 2000 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கும் ஐந்தாண்டு காலத்தில் தமிழ்நாட்டிற்கு ஏற்படவுள்ள இழப்பு ரூபாய் 4711 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி ஆணையத்தின் பரிந்துரைகளால் பாதிக்கப்பட்ட மாநிலங்கள் 21-8-2000 ஆம் நாளன்று இந்த ஏற்றுக்கொள்ள இயலாத, சமநிலையற்ற நிலையைச் சீரமைக்குமாறு பிரதமரிடம் கோரிக்கை ஒன்றினைக் கொடுத்துள்ளன. சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு வழங்குவதற்கான ஊக்க நிதி ஒன்றையாவது ஏற்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளோம். பதினோராவது நிதி ஆணையம், அதன் துணை அறிக்கையில் அனைத்து மாநிலங்களுக்கும் மொத்த ஊக்க நிதியாக அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ரூபாய் 5304 கோடிதான் என பரிந்துரைத்துள்ளதும் அதிலும் மொத்தமாக ஐந்தாண்டுகளுக்கு தமிழகத்தின் பங்கு ரூபாய் 402 கோடி மட்டுமே என்று கூறியிருப்பதும் முனைப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு கடும் தண்டனையாக அமைந்துள்ளது.

## உள்ளாட்சி மன்றங்கள்

7. மாநில அரசின் பல்வேறு மானியங்கள், வரி வருவாய்ப் பங்கீடு மற்றும் திட்டங்களுக்கான ஒதுக்கீடு ஆகிய வகையில் 1995-96-ல் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட நிதி ரூபாய் 787 கோடியிலிருந்து கடந்த ஆண்டு ரூபாய் 1997 கோடியாக அதிகரித்து வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இது நடப்பு நிதியாண்டில் ரூபாய் 2401 கோடியாக உயருகிறது என்பதையும் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

8. இது தவிர, ஊரக அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியத்தின் (RIDF) மூலம் ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூபாய் 110 கோடி நிதி பெறும் வசதியும், நகர கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழ்நாடு நகர்ப்பகுதி இரண்டாவது மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (TNUDP-II) ரூபாய் 341 கோடியே 80 இலட்சம் நிதி

பெறும் வசதியும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு செய்து தரப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், நிதி நிறுவனங்களிடமிருந்தும் சந்தையிலிருந்தும் நிதியாதாரங்களைத் திரட்டுவதற்கும், நகர்ப்புற வசதிப் பணிகளில் தனியாரை ஈடுபடுத்துவதற்கும் வழிவகை செய்து விரிவான சட்டமொன்றை இந்த அரசு நிறைவேற்றியுள்ளது.

*நகர்ப்பகுதி வளர்ச்சி*

9. சென்னை மாநகராட்சியில் 732 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மொத்த ரூபாய் 55 கோடி செலவில் புதுப்பிக்கும் ஒரு பெருந்திட்டம் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்ற மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் 2822 கி.மீ. நீளத்திற்குச் சாலைகள் மொத்தம் ரூபாய் 200 கோடி செலவில் மேம்படுத்தப்படுகின்றன. மதுரை நகரைச் சுற்றியுள்ள ஆரச்சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்திடும் திட்டம் ரூபாய் 112 கோடி மதிப்பீட்டில் ஹட்கோ நிறுவன உதவியுடன் செயல்படுத்தப்படும்.

10. எண்ணூர் பகுதியில் கடல் அரிப்பைத் தடுக்கவும் சென்னை மற்றும் எண்ணூர் துறைமுகங்களை தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைக்கும் சாலையை மேம்படுத்தவும் தமிழக அரசு, தேசிய நெடுஞ்சாலைக் குழுமம் மற்றும் சென்னைத் துறைமுகம் ஆகிய மூன்று இணைந்து செயல்படுத்தும் திட்டம் ரூபாய் 150 கோடி செலவில் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

11. மத்திய மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் உதவியோடு சுமார் ரூபாய் 1700 கோடி செலவில் ஆளுநர் உரையில் அறிவித்தவாறு காவிரி, வைகை, தாமிரபரணி ஆகிய நதிகளைத் தூய்மைப்படுத்தி சுற்றுச்சூழலை பாதுகாக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையின் ஒப்புதல் கிடைத்துவிட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

12. சேலம் திருமணி முத்தாறு சீரமைப்புடன் புறவழிச் சாலை அமைக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்து இப்பணி நடைபெற்று வருகிறது. இதற்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கப்படும்.

13. கடந்த நான்கு ஆண்டுகளில் 140 நகரங்களில் குடிநீர் வழங்கல் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் மேலும் 62 நகரங்களில் முடிக்கப்பட உள்ளன. 248 நகரங்களில் ரூபாய் 772 கோடி செலவில் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெறுகின்றன.



*ஊரக வளர்ச்சியும் வேலைவாய்ப்பும்*

14. மக்களின் பேராதரவைப் பெற்றுள்ள திட்டங்களான நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம், உழவர் சந்தை, வருமுன் காப்போம் திட்டம், கால்நடை பாதுகாப்புத் திட்டம், ஊரகச் சாலை மேம்பாட்டுத் திட்டம், கிராமத் தெருக்களை சிமெண்ட் கான்கிரீட் தெருக்களாக மாற்றியமைக்கும் திட்டம், மாணவருக்கான கணினிக் கல்வித் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்கள் தொடர்ந்து முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

15. இந்த நாலரை ஆண்டுகளில் 7,038 தொடக்கப் பள்ளிகள், 1,323 உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகள், 8,258 நியாய விலைக் கடைகள், 327 பால் கூட்டுறவுச் சங்கங்கள், 1,592 சத்துணவுக் கூடங்கள், 613 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 400 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் 812 ஊராட்சி அலுவலகங்கள் ஆகியவற்றிற்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

16. இதுவரை எந்த அரசும் செய்யாத வகையில் கிராமப்புற ஏழைகளுக்கு இந்த நாலரை ஆண்டுகளில், ரூபாய் 843 கோடி செலவில் 2,91,551 கான்கிரீட் வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு 2,60,654 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

17. இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை 27,274 ஊரகக் குடியிருப்புகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றியுள்ளது. மீதமுள்ள 4,202 குடியிருப்புகளுக்கும் வரும் நிதியாண்டில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

18. அவினாசி-அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்திற்கான கலந்தாளுநர் (Consultant) பரிந்துரை பெறப்பட்டுள்ளது. அதனைப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ள வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கையை விரைவில் பெற்று நிதி ஒதுக்கி நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பொது விநியோக முறை*

19. இன்றியமையாப் பொருட்களின் பொது விநியோகத் திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் அரசு மானியமாக ரூபாய் 1,700 கோடி ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இந்த ஒதுக்கீடு ரூபாய் 1,870 கோடியாக அதிகரிக்கும்.

20. இந்த நாலரை ஆண்டுகளில் 2,816 முழுநேர நியாய விலைக் கடைகளும், 2,475 பகுதிநேர நியாய விலைக் கடைகளுமாக மொத்தம் 5,291 நியாய விலைக் கடைகள் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளன.

21. மத்திய அரசு மண்ணெண்ணெய்க்கு நிர்ணயித்த விற்பனை விலையைவிட லிட்டர் ஒன்றுக்கு 60 காசுகள் குறைத்து, 1-1-2001 முதல் விற்பதற்கு இவ்வரசு ஆணை பிறப்பித்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

வேளாண்மை

22. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு விவசாயிகளின் கடன் மீதான அபராத வட்டி ரூபாய் 13 கோடியே 20 இலட்சம் தள்ளுபடி செய்யப்பட்டதன்மூலம் 3,40,727 விவசாயிகள் பயன் அடைந்தனர். இதே அடிப்படையில் **30-6-2000 வரை தவணை தவறிய விவசாயக் கடன்களுக்கு 30-6-2001-க்குள் வட்டியுடன் கடனைச் செலுத்தும் அனைத்து விவசாயிகளுக்கும் 3 சதவீதமாகவுள்ள அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும்.**

23. சென்ற ஆண்டு உரிய காலத்தில் கடனை திருப்பிச் செலுத்திய 2,47,023 விவசாயிகளுக்கு ரூபாய் 21 கோடியே 63 இலட்சம் வட்டி ஊக்குவிப்புத் தொகை அரசால் வழங்கப்பட்டது. **நடப்பு ஆண்டிலும் தவணை தவறாமல் திருப்பிச் செலுத்தப்படும் கடன் தொகைக்கு கடந்த ஆண்டில் வழங்கியதுபோல் வட்டியில் 7 சதவீதம் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படும். நடப்பாண்டில் ஏற்கெனவே முழுக் கடன் பாக்கியைச் செலுத்தியவர்களுக்கும் இது பொருந்தும். இதனால் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன் பெறுவார்கள்.**

24. கூட்டுறவு வங்கிகளிடம் பெறுகின்ற பயிர்க் கடனை, குறித்த தவணைக்குள் திருப்பிச் செலுத்தாத விவசாயிகளிடம் தற்போது அபராத வட்டியாக 3 சதவீதம் வசூலிக்கப்படுகிறது. இந்த வட்டியைக் குறைக்க வேண்டுமென விவசாயிகள் கோரி வருகின்றனர். **இக்கோரிக்கையை ஏற்று கூட்டுறவு வங்கிகள் 1-7-2000-லிருந்து தவணை தவறிய கடன் மீதான அபராத வட்டியை 3 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாகக் குறைத்திட முன்வந்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.**





(மேசையைத் தட்டும் ஒலி) **எனவே, வரும் ஆண்டுகளில் கூட்டுறவு பயிர்க் கடன் மீதான அபராத வட்டி 1 சதவீதம் மட்டுமே இருக்கும்.**

25. பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டப் பகுதியில் விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று மடை விட்டு மடை பாயும் பாசன முறை நடப்பாண்டில் செயல்படுத்தப்பட்டது.

26. விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணம் (Track Rent) ரத்து செய்யப்பட்டது.

27. கீழ்பவானி பாசனத் திட்ட ஆயக்கட்டு நில விவசாயிகளின் இடர்களைக் களைவதற்கு, பயிர் வாரித் தண்ணீர்த் தீர்வை விதிப்பதற்குப் பதிலாக ஏக்கர் வாரியாக, ஒரே வீதத்தில் தண்ணீர்த் தீர்வை விதிக்கும் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. அவர்கள் செலுத்த வேண்டிய தண்ணீர்த் தண்டத் தீர்வை நிலுவைகளும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

28. இவை தவிர, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் வேளாண்மை விற்பனை குறித்து நடைமுறையில் உள்ள சில சிக்கல்களை ஆராய்ந்து எளிமைப்படுத்த வேளாண்மைச் செயலர் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழு சென்ற ஆண்டு அமைக்கப்பட்டு இக்குழு தனது அறிக்கையை 8-1-2001 அன்று அளித்தது. குழுவின் பரிந்துரைகள்மீது பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன :

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விளை பொருள்களைக் கொண்டுவரும் விவசாயிகளுக்குச் சேர வேண்டிய முழுத் தொகையை அன்றே பட்டுவாடா செய்ய வழிவகைகள் வகுக்கப்படும்.** (மேசையைத் தட்டும் ஒலி)

**விவசாயிகள் எடுத்துச் செல்லும் விளைபொருள்களுக்கு விற்பனைக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்பட மாட்டாது.**

**அறுவடைக் காலங்களில் முக்கிய இடங்களில் தற்காலிக விற்பனை மையங்கள் ஏற்படுத்தப்படும். தேவைப்படும் இடங்களில் குளிர்பதனக் கிடங்குகள் ஏற்படுத்தவும், வெங்காயம், வாழை, தக்காளி போன்ற விளைபொருட்களுக்குத் தனித்தனியாக அவை உற்பத்தியாகும் இடங்களில் விற்பனைக் கூடங்கள் மற்றும் சேமிப்புக் கிடங்குகள் அமைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படும்.**

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விளைபொருள் வரத்தைப் பொறுத்து சுமார் 20 முதல் 200 ஏக்கர் நிலப்பரப்பில் கடைகள், கிட்டங்கிகள், உலர் களங்கள், தரம் பிரிப்பு மையங்கள், பரிவர்த்தனைக் கூடங்கள், ஓய்வு விடுதிகள் போன்ற வசதிகளுடன் கூடிய வளாகங்கள் அமைக்கப்படும்.

அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிக்குள் கொண்டுவருகிற, அறிவிக்கை செய்யப்பட்ட விளைபொருள்களை உருமாற்றம் செய்தோ அல்லது செய்யாமலோ மாநிலத்திற்கு வெளியே 60 நாட்களுக்குள் விற்றாலோ, அனுப்பினாலோ அல்லது விளைபொருள்களை அனுப்பியவர்களுக்கே திருப்பி அனுப்பினாலோ அதற்கு விற்பனைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. இதற்கான சட்டத் திருத்தம் கொண்டுவரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பாசனம்

29. போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாததால் தேங்கிக் கிடந்த 9 நீர்த்தேக்கத் திட்டங்களுக்கு இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தேவையான நிதி ஒதுக்கி, பணிகளை முடுக்கிவிட்டதன் விளைவாக, மோர்தனா, நம்பியாறு, பொய்கையாறு, இராஜா தோப்புக்காணாறு ஆகிய நான்கு நீர்த்தேக்கத் திட்டங்கள் நடப்பாண்டில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டமும் நடப்பு ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும். மீதமுள்ள அடவிநயினார் கோவில், கொடுமுடியாறு, வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கங்களும் கிருதமால் அணைக்கட்டும் வரும் நிதியாண்டில் முடிக்கப்பட்டுவிடும். தூத்துக்குடி மாவட்டம், சடையனேரி கால்வாய்த் திட்டம் நடப்பாண்டில் முடிவடையும்.

30. இந்த அரசு 1997 முதல் செயல்படுத்திவரும் ஆறுகள், கால்வாய்கள், ஏரிகள், வடிகால்களில் தூர்வாரும் பணிகள், விவசாயிகளிடம் பெற்ற பெரும் வரவேற்பினைக் கருதி, தொடர்ந்து செயல்படுத்தப்படும். ரூபாய் 106 கோடியே 26 இலட்சம் செலவில் பாலாறு, தாமிரபரணி மற்றும் வைகை ஆகிய நதிகளின் வடிநிலங்களில் உள்ள 620 கண்மாய்களைப் புதுப்பிக்கும் பணிக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

சாலைகள் மற்றும் பாலங்கள்

31. கிராமங்களை முக்கியச் சாலைகளோடு இணைக்கும் இந்த அரசின் திட்டத்தின்கீழ் 500-க்கு மேல் மக்கட்தொகையுள்ள இணைப்புச் சாலை



வசதி இல்லாத 480 கிராமங்களுக்கு கடந்த இரு ஆண்டுகளில் ரூபாய் 214 கோடி செலவில் சாலை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. வரும் நிதி ஆண்டில், மேலும் 160 கிராமங்களுக்கு ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் இணைப்புச் சாலை வசதி செய்து தரப்படும்.

32. சாலை வசதிகளை மேம்படுத்த இந்த அரசு தனது நிதி ஆதாரங்களோடு கூடுதலாக நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. 1996-97 முதல் 21,624 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் மேம்படுத்தும் பணிகள் ரூபாய் 1,650 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு 14,696 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ரூபாய் 1,185 கோடி செலவில் 601 பாலங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 325 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

33. நாமக்கல்-கரூர் மாவட்டங்களை இணைக்கும் வகையில் மோகனூர் வாங்கல் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ஒன்றும் (மேசையைத் தட்டும் ஒலி) ஈரோடு-நாமக்கல் மாவட்டங்களை இணைக்கும் வகையில் மொடக்குறிச்சி ஒன்றியம் லக்காபுரம் பரிசல் துறைக்கும் திருச்செங்கோடு கொக்கராயன்பேட்டைக்கும் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ஒன்றும் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

34. தேனி மாவட்டத்தில் உள்ள கடமலைக்குண்டு முதல் கோரையூத்து வரை 14 கிராமங்களுக்குப் பயன்படக்கூடிய 18 கி.மீ. நீளமுள்ள சாலையை சுமார் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத் துறை மூலம் பழுதுபார்ப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கி பணி தொடங்கப்படும்.

35. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் துறைமுகத்தை மலேசிய அரசின் உதவியுடன் உலகத்தரம் வாய்ந்த பெரும் துறைமுகமாக உருவாக்கும் சாத்தியக்கூறுகளை ஆராயவும் அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவும் இந்த அரசு மலேசிய அரசுடன் ஒப்பந்தம் ஒன்றில் விரைவில் கையெழுத்திடவுள்ளது.

போக்குவரத்து

36. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் 1996 முதல் இதுவரை 9,923 புதிய பேருந்துகளை வாங்கியுள்ளன. இக்காலகட்டத்தில் 1,474 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன.

37. இந்தியாவில் எல்லா மாநிலங்களையும்விட தமிழ்நாட்டில்தான் பேருந்துக் கட்டணம் குறைவாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

38. கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதியை வழங்கிட சிற்றுந்து (Mini-Bus) திட்டத்தை 1997-98-ல் அறிமுகப்படுத்தி, தற்போது 3,030 சிற்றுந்துகள் இயங்கி வருகின்றன. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மின் சக்தி

39. வரும் ஆறு மாதங்களுக்குள் 547 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட புதிய மின் திட்டங்கள் செயல்படவுள்ளன. இதன்மூலம் தமிழகம் தன்னிறைவு பெற்று மின்வெட்டு தவிர்க்கப்படும். விவசாயத்திற்கான மின்சாரம் பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் தடையின்றி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

40. "ஒரே நாளில் மின் இணைப்பு" என்ற புதிய திட்டத்தை தமிழ்நாட்டிலுள்ள பயனீட்டாளர்களின் நலன் கருதி 1-4-2000 அன்று தொடங்கி இதுவரை சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் வளர்ச்சி

41. தரமணியில் ரூபாய் 338 கோடி செலவில் 12 இலட்சம் சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள உலகத்தரம் வாய்ந்த கணினி மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா (டைடல் பூங்கா) பெற்றுள்ள வரவேற்பை அடுத்து, 20 இலட்சம் சதுர அடி பரப்பளவில் இரண்டாவது கணினி மென்பொருள் பூங்கா அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

42. நாங்குநேரியில் சர்வதேசத் தரம் வாய்ந்த உயர் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை அமெரிக்க தொழில்முனைவோருடன் இணைந்து டிட்கோ நிறுவனம் உருவாக்க உள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு



விழா இன்னும் சில நாட்களில் நடைபெற இருக்கிறது. இப்பகுதியில் ஏற்றுமதியை ஊக்குவிக்க மத்திய அரசின் வர்த்தக அமைச்சகம் இதை சிறப்புப் பொருளாதாரப் பகுதியாக (Special Economic Zone) அறிவித்துள்ளது.

43. இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனமும் டிட்கோ நிறுவனமும் இணைந்து சென்னை நந்தம்பாக்கத்தில் அமைத்துள்ள வர்த்தக மையம் நாளை மறுநாள் திறக்கப்படவுள்ளது. இந்த இடத்தில் முதல் பொருட்காட்சியாக "இந்தியப் பன்னாட்டு தோல் வர்த்தகப் பொருட்காட்சி-2001" நடைபெறும்.

44. தமிழகத்தின் வளர்ந்துவரும் தொழில் மற்றும் வர்த்தகத்தைக் கருத்தில் கொண்டு, சென்னையில் புதிய பன்னாட்டு விமான நிலையம் ஒன்றினை அமைக்க மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம். மத்திய அரசு விரைவில் ஒப்புதல் அளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

தகவல் தொழில்நுட்பம்

45. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழகம் முன்னணியில் உள்ளது. சென்னை தரமணிக்கும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள திருப்போரூருக்கும் இடையே உள்ள பழைய மாமல்லபுரம் சாலை தகவல் தொழில்நுட்ப நெடுஞ்சாலையாக (IT Highway) உருவாகி வருகிறது. இப்பகுதியிலுள்ள நிறுவனங்களுக்குத் தேவையான மின் வசதி, சாலை வசதி, போக்குவரத்து வசதி, குடிநீர் வசதி ஆகிய கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உயிரியல் தொழில்நுட்பம்

46. இந்த அரசு அறிவித்த உயிரியல் தொழில்நுட்பக் கொள்கையைச் செயல்படுத்திட டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையிலான மாநில உயிரியல் தொழில்நுட்ப வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் உயிரியல் தொடர்புடைய தொழில்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக, புதிய "வளர் தொழில்நுட்ப ஊக்க நிதி" (Emerging Technologies Fund) ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

கல்வி

47. நடப்பு நிதியாண்டில் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு ரூபாய் 4,949 கோடியிலிருந்து வரும் நிதியாண்டில் ரூபாய் 5,472 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

48. இந்த அரசு நாலரை ஆண்டுகளில் 1,039 தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கியுள்ளது. 512 தொடக்கப் பள்ளிகளை இடைநிலைப் பள்ளிகளாகவும், 380 இடைநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 283 உயர்நிலைப் பள்ளிகளை மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தியுள்ளது. 662 பள்ளிகளில் ரூபாய் 39 கோடியே 10 இலட்சம் செலவில் ஆய்வுக்கூடக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1,544 பள்ளிகளுக்கு ரூபாய் 7 கோடி செலவில் ஆய்வுக்கூடச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**49. வேளாண்மைக் கல்லூரியில் சேர முனையும் மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பாக, பள்ளிக் கல்வியில் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ள வேளாண்மைக் கல்விப் பயிற்சி 100 பள்ளிகளில் செம்மையாகச் செயல்பட ஆவன செய்யப்படும்.**

50. டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் பள்ளிச் சிறார்களுக்குப் பயனளிக்கின்ற வகையில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. சத்துணவுத் திட்டங்களுக்கு, வரும் நிதியாண்டில் ரூபாய் 580 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இளைஞர் நலன்

51. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், இளைஞர்களுக்கு விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் பொழுதுபோக்குக்கான வசதிகளை அளிக்க ஊராட்சிகளிலும் நகர்ப் பகுதிகளிலும் விளையாட்டு மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருந்ததைத் தொடர்ந்து, இதுவரை 7,000 இடங்களில் இத்தகைய மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

52. இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு நிதி நிறுவனம் அமைப்பு குறித்து ஆராய்ந்து, பரிந்துரைகள் அளிக்க மாநில திட்டக் குழு உறுப்பினர் திரு. வெங்கிடரமணன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையை அளித்துள்ளது. இதன் பரிந்துரைகளை ஏற்று மாநிலத்தில் பல துறைகள், நிதி நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டுவரும் சுய வேலைவாய்ப்புத் திட்டங்களை ஒருங்கிணைத்து முனைப்புடன் செயல்படுத்த 'தமிழ்நாடு சுய வேலைவாய்ப்பு ஊக்குவிக்கும் மையம்' (Tamil Nadu Centre for Self Employment Promotion) ஒன்றினை உருவாக்க அரசு முடிவு எடுத்துள்ளது.





**தமிழ் மொழியும் பண்பாடும்**

53. தமிழ் இலக்கிய சங்கப் பலகை குறள்பீடம் அமைக்கப்பட்டு தமிழறிஞர் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்களுக்கு முதல் குறள்பீட விருது வழங்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய 5 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட 16 நூல்கள் மற்றும் சிறுகதைகள் இச்சங்கப் பலகை மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

54. பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்களது நூல்களை நாட்டுடைமையாக்கி அவருடைய குடும்பத்தினருக்குப் பரிவுத் தொகையாக ரூபாய் 10 இலட்சம் வழங்கப்பட்டது.

55. மயிலாடுதுறை விசுவநாத சாஸ்திரியார் உருவாக்கிய திருக்குறள் மதுர கீர்த்தனை பழைய பிரதி ஒன்றினை இசைமேதை செம்மங்குடி அவர்கள் என்னிடம் அளித்து அதனைப் புதிதாக வெளியிட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதனையேற்று முதல் பகுதி, இந்த அரசினால் கடந்த திங்கள் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தொடர்ந்து திருக்குறள் மதுர கீர்த்தனையின் மற்ற இரு பகுதிகளை வெளியிடவும், சாஸ்திரியாரின் இசைப் படைப்புகளைப் பொது மக்களிடையே பரப்பிடவும் ஐந்து இலட்சம் ரூபாய் மானியமாகத் தரவேண்டுமென்று அரசுக்கு வைக்கப்பட்டுள்ள கோரிக்கை ஏற்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

56. தமிழ் வளர்த்த சான்றோர், நாட்டுக்குழைத்த நல்லோர், தியாகச் செம்மல்கள் ஆகியோர்தம் நினைவைப் போற்றிப் பரப்பி வருவதை மன நிறைவளித்திடும் கடமைகளில் ஒன்றாகக் கருதும் இந்த அரசு 1996-க்கு பின்னர் அய்யன் திருவள்ளுவருக்கு வானுயரச் சிலை, அண்ணல் அம்பேத்கர் மணி மண்டபம், தியாகிகள் மணி மண்டபம், ஜீவா மணி மண்டபம், தியாகி விசுவநாததாஸ் நினைவு இல்லம், மாவீரன் பூலித்தேவன் நினைவு மண்டபம், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் நினைவு மண்டபம், பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டபம், பெரியவர் பக்தவச்சலம் மணி மண்டபம், உடுமலை நாராயணக் கவி மணி மண்டபம், மருது பாண்டியர் நினைவிடம், மொழிப்போர் தியாகிகள் மணி மண்டபம், தியாகசீலர் கக்கன் மணி மண்டபம், தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு மண்டபம், தீரன் சுந்தரலிங்கம் நகர் போன்றவற்றை அமைத்துள்ளதைத் தொடர்ந்து சென்னையில் கண்ணியத்திற்குரிய காயிதே-மில்லத் அவர்களுக்கு மணி மண்டபமும், தூத்துக்குடி மாவட்டம்

கட்டாரங்குளத்தில் வீரன் அழகுமுத்துக்கோன் மணி மண்டபமும் கட்டப்படவுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

57. தொல்பழங்காலந்தொட்டு தமிழ்நாட்டின் வரலாற்றை 8 தொகுதிகளில் தொகுத்து வெளியிட முடிவு செய்யப்பட்டு, இதுவரையிலும், 5 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒன்று அச்சில் உள்ளது. இன்னும் இரண்டு தொகுதிகள் வெளியிடப்பட உள்ளன.

## மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலன்

58. 1995-96 ஆம் ஆண்டில் ரூபாய் 689 கோடியாக இருந்த மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான ஒதுக்கீடு படிப்படியாக உயர்த்தப்பட்டு, வரும் நிதியாண்டில் ரூபாய் 1,311 கோடியாக உயர்ந்துள்ளது.

59. இளம்பிள்ளைவாத நோயை இம்மாநிலத்திலிருந்து முற்றிலும் அகற்றிட வேண்டும் என்ற இந்த அரசின் தீவிர முயற்சியின் பயனாக இந்நோய் அறவே தலைகாட்டாவண்ணம் போலியோ சொட்டு மருந்து போடும் பணி வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

60. பள்ளி செல்லும் சிறார்களின் உடல்வளத்தைப் பேணிக் காக்கும் பொருட்டு, அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 'வாழ்வொளித் திட்டம்' இந்தஅரசால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு இது வரையில் சுமார் 60 இலட்சம் சிறார்கள் உடல்நிலை பரிசோதிக்கப்பட்டு, 34 இலட்சம் பேருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. பார்வைக் கோளாறு உள்ள மாணவர்களுக்கு இலவசக் கண்ணாடியும் வழங்கப்பட்டுள்ளது.

## வாழ்ந்து காட்டுவோம்

61. மகளிருக்கு சுயவேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிகளை அளிப்பதன்மூலம் அவர்கள் சமூக-பொருளாதார உரிமைகளைப் பெறும் வகையில் இந்த அரசால் 1989-90 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மகளிர் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட 58,391 சுய உதவிக் குழுக்கள் இதுவரை ரூபாய் 64 கோடிக்குமேல் சேமித்ததுடன் வங்கிகள் மூலமாக ரூபாய் 131 கோடியே 12 இலட்சம் கடனுதவியும் பெற்றுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



62. வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் கூட்டுறவு வங்கிகள் மூலம் சமையல் எரிவாயு அடுப்பு மற்றும் சிலிண்டர் வாங்குவதற்காகக் கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் பெற்றுள்ள வரவேற்பையொட்டி, மற்ற மாவட்டங்களிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த கூட்டுறவு வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

## ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலன்

63. ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலனுக்காக 1995-96 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 194 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு நடப்பு நிதியாண்டில் ரூபாய் 626 கோடியாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

64. 1996-97 ஆம் ஆண்டிலிருந்து, 85 ஆதிதிராவிடர் நல உயர்நிலை/மேனிலைப் பள்ளிகளுக்குக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிட இளைஞர்களுக்கு, வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட கணினி, தட்டச்சு, பிளாஸ்டிக் மற்றும் ஆடை வடிவமைப்புத் தொழில்நுட்பவியல் போன்ற துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

65. பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு, மூன்றாம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை தொடர்ந்து கல்வி பயிலும் ஆதிதிராவிட/பழங்குடியினர் மாணவிகள் 60,000 பேருக்கு ஒவ்வொரு ஆண்டும் தலா ரூபாய் 500 வீதமும், 6 ஆம் வகுப்பில் கல்வி பயிலும் 30,000 மாணவிகளுக்கு ஆண்டுக்கு தலா ரூபாய் 1,000 வீதமும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூபாய் 6 கோடி செலவிடப்படும்.

66. இந்த நாலரை ஆண்டுகளில் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ், ரூபாய் 65 கோடியே 73 இலட்சம் மதிப்பில் 3 இலட்சத்து ஏழாயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

67. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு பழங்குடியினர் நலனுக்காக ஒரு தனி இயக்ககம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

## பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்

68. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் நலனுக்காக 1995-96 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 47 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு நடப்பு நிதியாண்டில் ரூபாய் 175 கோடியாக உயர்ந்துள்ளது.

69. 1998 ஆம் ஆண்டிலிருந்து, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் குடும்பங்களிலிருந்து முதலாவதாகக் கல்வி கற்கின்ற மாணவருக்கு பல்தொழில் பயிற்சிப் பயிலகங்களில் (Polytechnic) பட்டயக் கல்வி இலவசமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது.

70. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினரைச் சேர்ந்த மாணவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் சம அளவில் செலவுப் பொறுப்பேற்கும் வகையில் ரூபாய் 8 கோடியே 27 இலட்சம் செலவில் 21 மாணவரில்லக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

71. 1999-2000 ஆம் ஆண்டு முதல் ரூபாய் 6 கோடி செலவில் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 60,000 மாணவிகளுக்கு ஆண்டுதோறும் தலா ரூபாய் 500/-ம், 6 ஆம் வகுப்பு பயிலுகின்ற 30,000 மாணவிகளுக்கு ஆண்டுதோறும் தலா ரூபாய் 1,000/-ம் சிறப்பு ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

72. இந்த அரசு அண்மையில் அமைத்துள்ள உருது அகாடமி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், டாக்டர் சையது சஃபியுல்லா அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டு 21 உறுப்பினர்களுடன் பணியைத் தொடங்கி இதுவரையில் மூன்று கூட்டங்களை நடத்தியுள்ளதோடு கவிச் சம்மேளனம், கருத்தரங்கம் போன்ற எதிர்கால நடவடிக்கைக்கான செயல்திட்டங்களையும் வகுத்துள்ளது.

73. மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் மிகுந்த அக்கறையுள்ள இந்த அரசு, மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்டு அதன் காரணமாகத் தீவிர மத வெறியர்களால் கொல்லப்பட்ட கோயம்புத்தூர் கோட்டை அமீர் அவர்களைப் பெருமைப்படுத்த அவரது பெயரால் குடியரசு தின விழா அன்று விருது வழங்க முடிவெடுத்து இந்த ஆண்டு முதலாவதாக தஞ்சை



சுல்தான் அவர்களுக்கு வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) **அத்துடன் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்று அமீர் அவர்களது துணைவியாருக்கு மாதாந்திர ஒய்வூதியமும் அவரது மகளுக்கு அரசுப் பணியும் அவரது குடும்பத்தாருக்கு கோவையில் இலவசமாக வீடும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

## சமூகப் பாதுகாப்பு

74. அரசுக்குத் தேவைப்படாத புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி அனுபவித்து வருகின்ற நபர்களுக்கு அந்த வீட்டுமனைகள் சொந்தமாக்கப்படும் என்று கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததையொட்டி 15-1-2001 வரை 1,75,257 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

75. இந்த நாலரை ஆண்டுகளில் 56,154 நிலமற்ற ஏழைகளுக்கு 37,905 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டது. அதில் 14,689 பேர் ஆதிதிராவிடர் வகுப்பையும் 591 பேர் பழங்குடியினர் வகுப்பையும் சேர்ந்தவர்களாவர்.

76. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வயதின் அடிப்படையில் மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஆதரவற்ற மகளிர், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு வழங்கி வந்த மாதாந்திர உதவித்தொகையை, இந்த அரசு ரூபாய் 100/- லிருந்து ரூபாய் 200/- ஆக அதிகரித்துள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட பயன்பெறுவோர் எண்ணிக்கை வரையறையும் நீக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவோர் எண்ணிக்கை நடப்பு ஆண்டில் 10 இலட்சத்து 44 ஆயிரமாக உள்ளது. மொத்த உதவித் தொகை 1995-96-ல் ரூபாய் 65 கோடியாக இருந்தது. நடப்பு ஆண்டில் ரூபாய் 248 கோடியாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**77. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உறுதியளித்தவாறு ஊனமுற்ற 300 பேருக்கு 6 மையங்களில் இலவசக் கணினிக் கல்வி கற்பிக்கப்படுகிறது. மேலும் மருத்துவ ஆய்வுக்கூடத் தொழில்நுட்பம், இதயத் துடிப்பை அளவிடுதல், எக்ஸ்-கதிர் படமெடுத்தல் ஆகியவற்றிலும் 300 ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.**

நெசவாளர் நலன்

78. நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கும், நகர்ப் பகுதிகளிலுள்ள ஏழைகளுக்கும் இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், அத்துடன் நெசவாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, இந்த ஆண்டு பொங்கல் திருநாளின்போது, ரூபாய் 110 கோடி மதிப்புள்ள சுமார் 81 இலட்சம் சேலைகளும், 74 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்பட்டன.

79. நடப்பாண்டில் ரூபாய் 70 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. நெசவாளர்களின் வாரிசுகளுக்குத் தேசிய ஆடை வடிவமைப்புப் பயிற்சி நிறுவனம் (NIFT) மூலம் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

80. இந்த நான்கரை ஆண்டுகளில் கைத்தறி நெசவாளர்களுக்கான சேமிப்பு காப்புத்தொகை ரூபாய் 15,000/-லிருந்து ரூபாய் 50,000/- ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கான முதியோர் உதவித்தொகையும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100/-லிருந்து ரூபாய் 200/- ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது, இத்திட்டத்தின்கீழ் 7,515 நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

81. கைத்தறித் துணி விற்பனைக்கு ஓராண்டில் 100 நாட்களுக்கு மட்டுமே தள்ளுபடி அனுமதிக்கப்பட்டு வந்த நிலையை மாற்றி, இந்த அரசு, ஆண்டு முழுவதும் 20 சதவீதத் தள்ளுபடி வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) வருகிறது. நடப்பு ஆண்டில் பொங்கல் பண்டிகையையொட்டி, 30 சதவீதம் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டது. தள்ளுபடி உதவித் தொகையாக நடப்பாண்டில் ரூபாய் 69 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

வணிகர் நலன்

82. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வணிக வரி தொடர்பாக இருந்த பல நடைமுறைச் சிரமங்களைப் போக்கும் வகையில் அறிவிக்கப்பட்ட முடிவுகள் வணிகர்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளன. குறிப்பாக சுய வரிவிதிப்பிற்கான வியாபார உச்சவரம்பு ரூபாய் 20 இலட்சத்திலிருந்து ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தப்பட்டதானது ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட வணிகர்களுக்குப் பயனளித்துள்ளது.



83. 1989 ஆம் ஆண்டில் இவ்வரசால் உருவாக்கப்பட்ட வணிகர் நல வாரியம் தற்போது கூடுதலாக 9 அலுவல் சாரா உறுப்பினர்களுடன் விரிவுபடுத்தப்பட்டு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

84. மாநிலத்திற்குள் அமைந்திருந்த வணிக வரித் துறையைச் சார்ந்த 29 சோதனைச் சாவடிகளும் வேளாண்மைத் துறையைச் சார்ந்த 11 சோதனைச் சாவடிகளும் நடப்பு ஆண்டில் அகற்றப்பட்டன.

85. மேலும் அறிவிக்கை செய்யப்பட்ட விளைபொருள்களில் ஆண்டொன்றிற்கு ரூபாய் 5 இலட்சம் வரை வணிகம் செய்கின்ற விவசாய விளைபொருள் சில்லறை வணிகர்களுக்கு உரிமம் பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும். இதனால் சுமார் 25,000-க்கும் மேற்பட்ட விவசாய விளைபொருள் சிறுவணிகர்கள் பயன்பெறுவார்கள். மேலும் 5 குதிரைத்திறன் (5 HP) வரை மோட்டார் இயந்திரத்தை நிறுவி கூலி அரவை செய்யும் ஆலைகளுக்கும் உரிமம் பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

தொழிலாளர் நலன்

86. 60-க்கு மேற்பட்ட பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக "தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தை" இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. ஏற்கெனவே உள்ள கட்டடத் தொழிலாளர்கள் நல வாரியம் அல்லாமல் விவசாயத் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள், பனைமரத் தொழிலாளர்கள், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள், முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள், காலணி தயாரிக்கும் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், தையல் தொழிலாளர்கள் மற்றும் ஓவியர்கள் ஆகிய அதிக எண்ணிக்கை கொண்ட சிலவகைத் தொழிலாளர்களுக்காக இந்த அரசு தனித்தனியாக நல வாரியங்களையும் அமைத்துள்ளது. இவற்றில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணம், திருமண உதவி, மகப்பேறு நலன், குழந்தைகளுக்கு படிப்பு உதவி ஆகியவற்றை இந்த வாரியங்கள் வழங்கும்.

87. மூடப்பட்ட தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு இந்த அரசு 1999-2000 ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் ரூபாய் 250 உதவித் தொகையாக வழங்கி வருகிறது. தற்போது 8,081 தொழிலாளர்கள் இவ்வுதவித் தொகையைப் பெற்று வருகிறார்கள். இத்தன்னியில் இவ்வகைத் தொழிலாளர்களுக்கு 1998-லிருந்து ஒவ்வோர் ஆண்டும் முதலமைச்சர்

[கலைஞர் மு. கருணாநிதி] [2001 ஜனவரி 29

நிவாரண நிதியிலிருந்து தீபாவளிப் பண்டிகைக்காக வழங்கப்பட்டு வருவதைப்போல் நடப்பாண்டிலும் ரூபாய் 63 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுவசதி

88. 1996-97-லிருந்து 2000-2001 வரையிலான கால அளவில் 9 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. பயனடைந்தோரில் 3 இலட்சத்து மூவாயிரம் பேர் ஆதிதிராவிடர் வகுப்பையும், 10,794 பேர் பழங்குடியினர் வகுப்பையும், எஞ்சியுள்ளோர் ஏனைய வகுப்புகளையும் சேர்ந்தவர்களாவர்.

89. இந்த அரசின் புதிய திட்டங்களில் ஒன்றாக மாநகராட்சிப் பகுதிகளில் குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்குக் கல்நார் தகடுகளாலான கூரை, சுவர் மற்றும் கதவுடன் கூடிய இலவச வீடுகள் அமைக்கும் பணி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு 31-3-2000 வரை ரூபாய் 26 கோடியே 50 இலட்சம் செலவில் 21,329 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் 26,000 குடும்பங்களுக்கு ரூபாய் 39 கோடி செலவில் வீடுகள் கட்டும் பணி விரைவில் முடிவடையும்.

90. காவல் துறைப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித்தரும் திட்டத்தின்கீழ் இந்த நாலரை ஆண்டுகளில் மொத்தம் ரூபாய் 348 கோடியே 19 இலட்சம் மதிப்பீட்டில் 12,102 குடியிருப்புகளை தமிழ்நாடு காவல் துறை வீட்டுவசதிக் கழகம் மூலம் கட்டித்தர ஆணையிடப்பட்டு, இதுவரை 10,111 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள குடியிருப்புகளைக் கட்டும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது.

மாவட்ட நிருவாகம்

91. 1996-ல் இந்த அரசு பொறுப்பேற்றபின் தேனி, திருவள்ளூர், திருவாரூர், நாமக்கல் மற்றும் அரியலூர் ஆகிய ஐந்து புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. விழுப்புரம், திருவள்ளூர், தூத்துக்குடி, திருவண்ணாமலை, கரூர், நாமக்கல், தேனி, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய ஒன்பது மாவட்டங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்கள் ரூபாய் 60 கோடியே 54 இலட்சம் செலவில் இந்த நாலரை ஆண்டுகளில் கட்டி முடித்த சரித்திரச் சாதனையை இந்த அரசு புரிந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)



2001 ஜனவரி 29] [கலைஞர் மு. கருணாநிதி]

**அரசுப் பணியாளர், ஆசிரியர் மற்றும் ஓய்வூதியதாரர் நலன்**

92. அரசுப் பணியாளர்களின் நலனைப் பேணிக் காப்பதில் இந்த அரசு எப்போதும் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநாட்டில் கலந்துகொண்டு அறிவித்த முடிவுகளின்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு சி மற்றும் டி பிரிவைச் சார்ந்த அரசு ஊழியர்களுக்கான பொங்கல் ஊதியக்கொடை ரூபாய் 2,500 என்ற வரம்பிற்குட்பட்டு ஒரு மாதச் சம்பளமாக உயர்த்தப்பட்டது.

93. அரசுப் பணியாளர்களின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல மற்றும் பணிக்கொடைத் திட்டம் 2000 என்ற புதிய ஓய்வுகாலப் பலன் திட்டத்தையும் இந்த அரசு தற்போது அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

ஆண்டுத் திட்டம்

94. ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவை ஒவ்வோராண்டும் இம்மாநில அரசு தொடர்ந்து முழுவதுமாகப் பயன்படுத்தி வந்துள்ளது. நடப்பு நிதியாண்டிலும், ரூபாய் 5,700 கோடி திட்ட ஒதுக்கீடு முழுமையாக பயன்படுத்தப்படும். 2001-2002 ஆம் ஆண்டு, ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் கால அளவு முடிவடையும் ஆண்டாகும். இந்த ஆண்டிற்கான திட்ட அளவு பொதுத் தேர்தலுக்குப்பின் மத்திய திட்டக் குழுவுடன் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படும்.

நிதி நிலைமை

95. நடப்பாண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை 2000 மார்ச் திங்களில் இப்பேரவையில் வைத்தபோது, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூபாய் 18,406 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூபாய் 21,565 கோடியாகவும் இருந்தது. 2000-2001 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூபாய் 18,396 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூபாய் 22,318 கோடியாகவும் ஆகியுள்ளது.

96. 2001-2002 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூபாய் 20,635 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூபாய் 24,294 கோடியாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2001-2002 ஆம் ஆண்டு உடனடிச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.**

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு | |
| 1. நில வருவாய்த் துறை | 7,58,62 |
| 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 12,14,45 |
| 3. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 18,80,26 |
| 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் | 67,34,52 |
| 5. முத்திரைத் தாள்கள்-நிருவாகம் | 5,65,27 |
| 6. ஆவணப் பதிவு | 28,49,82 |
| 7. மாநிலச் சட்டமன்றம் | 6,03,08 |
| 8. தேர்தல்கள் | 84,23,28 |
| 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 93,07,71 |
| 10. பால் வழங்கு செயல் திட்டங்கள் | 6,88,34 |
| 11. மாவட்ட நிருவாகம் | 3,12,23,86 |
| 12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 13,81,62 |
| 13. நீதி நிருவாகம் | 75,01,40 |
| 14. சிறைச்சாலைகள் | 29,34,79 |
| 15. காவல் துறை | 5,83,03,75 |
| 16. தீயணைப்புப் பணிகள் | 28,94,88 |



| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| 17. கல்வி | 27,14,28,86 |
| 18. மருத்துவம் | 3,98,95,19 |
| 19. மக்கள் நல்வாழ்வு | 2,62,53,44 |
| 20. வேளாண்மை | 4,53,30,65 |
| 21. மீனளம் | 23,82,78 |
| 22. கால்நடை வளர்ப்பு | 83,87,35 |
| 23. கூட்டுறவு | 33,18,79 |
| 24. தொழில்கள் | 8,24,63 |
| 25. கைத்தறியும் துணித் தொழிலும் | 1,18,45,25 |
| 26. கதர்-கிராமத் தொழில்கள் | 15,80,04 |
| 27. ஊரக வளர்ச்சி | 7,07,89,70 |
| 28. தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் | 47,83,61 |
| 29. சமூக நலன் | 3,54,16,26 |
| 30. பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 1,86,91,08 |
| 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் | 80,07,39 |
| 32. வீட்டு வசதி | 34,70,05 |
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி | 24,51,21 |
| 34. நுகர்பொருள் வழங்கல் | 10,12,03,90 |
| 35. பாசனம் | 2,11,73,36 |
| 36. பொதுப் பணிகள்-கட்டடங்கள் | 46,22,79 |
| 37. சுற்றுச்சூழல் | 1,61,78 |

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| 38. சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து | 1,72,66,16 |
| 39. சாலைப் போக்குவரத்துப் பணிகள் | 11,70,22 |
| 40. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 54,64,41 |
| 41. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 15,13,90,59 |
| 42. பல்வகை | 1,49,72,09 |
| 43. எழுதுபொருள்-அச்சுத் துறை | 31,34,44 |
| 44. காட்டுவளத் துறை | 50,26,75 |
| 45. இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 39,39,39 |
| 46. செய்தி-திரைப்படத் தொழில்நுட்பவியல் | 11,95,91 |
| 47. ஊரகத் தொழில்கள் | 42,24,74 |
| 48. குடிநீர் வழங்கல் | 84,56,32 |
| 49. நகராட்சி நிருவாகம் | 2,67,14,83 |
| 50. சுற்றுலா | 2,24,33 |
| 51. தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 16,49,32 |
| மொத்தம் அ. வருவாய்க் கணக்கில் செலவு | **106,41,13,26** |
| (ஆ) வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | |
| 52. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 4,49,06 |
| 53. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 1 |
| 54. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 2,21,28,45 |
| 55. பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 61,57,53 |



| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| 56. சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 3,22,59,06 |
| 57. சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 66 |
| 58. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 60,73,31 |
| 59. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 7,00 |
| 60. பல்வகை மூலதனச் செலவு | 4,58,72,39 |
| மொத்தம் ஆ. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு | **11,29,47,47** |
| (இ) கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும் | |
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 2,75,83,89 |
| பெருமொத்தம் | **120,46,44,62** |

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும், நாளை (30-1-2001) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, முற்பகல் 11-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

– ஏதுமில்லை –

223686

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.